# திராவிடநாடு



## பாடம் பெறுமா?

★

பம்பாய் நகரில் உள்ள தர்ம நிலையங்களில் 4 கோடி, 40 லட்சம் ரூபாய் பணம் 'இலாபமாக'—அதாவது செலவுக்கு மேல் வரவாக முடங்கிக்கிடக்கின்றன. பம்பாய் அரசாங்கத்தினர் கண்டு பிடித்துள்ளனர். கடந்த 15-மாதக் கணக்கில் இந்த 4-கோடி மிச்சம் என்பது தெரிந்துள்ளது. பம்பாய் மாநிலம் பூராவுமுள்ள தர்ம நிலையங்களின் கணக்குகளையும் அரசாங்கம் பரிசீலித்து, முடங்கிக் கிடக்கும் நிதிகளைக் கண்டுபிடிக்குமெனத் தெரிகிறது. தர்ம நிலையங்களில் குவிந்துகிடக்கும் நிதிகளை எடுத்து, மக்களுக்குக் கல்வி, மருத்துவ உதவி முதலியனவற்றில் செலவிட பம்பாய் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சென்னை மாநிலத்திலும் ஏராளமான வருவாயுள்ள தர்ம நிலையங்களும் மடங்களும் உள்ளன. பம்பாய் மாநிலம் செய்ததைச் சென்னை மாநில அரசாங்கம் பின்பற்றுமா?

✱

## அதிலும் தமிழே!

★

அண்மையில் டில்லியில் இந்திய உபகண்டத்திலுள்ள 14-மொழிகளிலும் வெளிவந்துள்ள புத்தகக் காட்சியொன்று நடைபெற்றதாம். அதில் ஒவ்வொரு மொழியிலும் முதல் முதலாக அச்சான புத்தகத்தையும் வைத்திருந்தார்களாம். இந்தியாவிலே முதல் முதலில் அச்சான புத்தகம் தமிழில்தான் — என்று அக்காட்சிக்குச் சென்றிருந்த அழ. வள்ளியப்பா என்பார் தீட்டுகிறார் பெருமிதத்துடன். 1578-ல் கொல்லத்தில் அச்சிடப்பட்ட அப்புத்தகத்தின் பெயர், "Doctrina Christam" என்பது. இது ஹென்றிகுஸ் என்ற பாதிரியார் தமிழில் மொழிபெயர்த்தெழுதிய கிறிஸ்தவ வேதப் புத்தகம். இங்கே அதன் பிரதி கிடைக்காததால் அமெரிக்காவிலுள்ள ஹார்வார்ட் கல்லூரி நூல் நிலையத்திலிருந்து புகைப்படம் எடுத்துக்கொண்டுவந்து வைத்துள்ளார்களாம். தமிழகம், எத்துணையோ துறைகளில், புதுமையைக் கண்ட பூமிதான்! ஆனால்......!!

✱

# செய்திகள்

## இவ்வளவு நாள் கழித்து..!

★

தவறுதான்!—என்று ஒப்புக்கொண்டு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் பொதுக் காரியதரிசி அஜாய்குமார்கோஷ், 'நியுஏஜ்' ஏட்டில் ஒரு கட்டுரை தீட்டியுள்ளாராம். "சோவியத் ரஷ்யாவில் என்ன செய்யப்பட்டாலும் அது சரிதான் என்ற முறையில் இந்திய கம்யூனிஸ்டுகள் இதுவரையில் நடந்துகொண்டு வந்தது தவறுதான்" என்கிறார், தோழர் கோஷ். இப்படிகண்மூடிக்கொண்டு பின்பற்றக் கூடாது, ஒவ்வொரு நாட்டுக்கும் அதனதன் அமைப்பு, மக்களைப் பொறுத்து கவனிக்க வேண்டிய பிரச்னைகள் ஒரேவிதமாக இராது, என்று கூறிவருவோர் நாம். இதனால் மாஸ்கோவின் புகழைப் பாராட்டாதவர்களல்ல. பாராட்டுவது வேறு! பூஜாமனோபாவம் வேறு! தவறுதான் என்கிறார் தோழர் கோஷ், இப்போது. இதுபோல, "தாய் நாட்டின் பிரச்னைகளை அகில இந்தியத்துடன் ஒட்டவைத்து ஒன்று சேரப் பேசிக்கொண்டிருந்தது, தவறுதான்" என்று 'நமது' ஜீவாக்கள் சொல்லும் காலம் வராதென்று நினைக்கிறீர்கள்? நிச்சயம் வரும்!

✱

## காவி கட்டினாலும்...!

★

காவியுடுத்தி கந்தா! கடம்பா! என்று ஜபித்துவிட்டு, காசுக்கும் சுகபோகத்துக்கும் போட்டிபோடும் மடாதிபதிகளைப்பற்றி எவ்வளவோ கூறினும், இன்னும் சிலர் முறைக்கிறார்களென்றே நம்மை. இதோ ஒருவர் பெயரே காவிமடாதிபதியாம் — ஆந்திர உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்துகொண்டாராம், உருவைக்கொண்டா மடத்து உரிமை சம்பந்தமாக. மடாதிபதியின்மீது, மடத்தைச் சரியாகக் கவனிக்கவில்லை, மடத்தின் சொத்துக்களை அதிகார பூர்வமற்ற முறையில் கைப்பற்ற முயல்கிறார் என்று கூறி இருவர் வழக்குத் தொடர்ந்தனர். நீதிபதிகள், காவி மடாதிபதியை மடத்திலிருந்து அப்புறப்படுத்தி தீர்ப்பு வழங்கியிருக்கின்றனர். காவி கட்டினாலும் காசாசை போகுமா.

✱

## காஷ்மீர்

★

காஷ்மீரம், இந்தியாவின் ஒரு பகுதி என்று கூறப்பட்டு வருகிறது.

இதை நிரூபிப்பதற்காக அள்ளி விடப்பட்டு வரும் பணமும், பலியிடப்பட்ட படையினரும் ஏராளம்.

இந்தியாவின் பகுதி என்று கூறப்படும் காஷ்மீரம் தனக்கென ஒரு தனிஅரசியலமைப்பை சென்ற கிழமை அமைத்துக்கொண்டு இருக்கிறது.

இப்படியொரு 'தனித் தர்பார்' நடத்திக்கொள்ள காஷ்மீருக்கு சலுகை தந்துவிட்டு அதே சமயத்தில் அது இந்தியாவுடன் சேர்ந்தது என்கின்றனர்.

காஷ்மீரத்துக்குள் நுழைய வேண்டுமென்றால் அந்நாட்டு சர்க்காரின் அனுமதியைப் பெற்றே யாகவேண்டும்.

இப்படிப்பட்ட தனிச் சலுகைகள் போராடிப் புலம்பிக்கொண்டிருக்கும் நாக நாட்டினருக்கு ஏன் நேரு சர்க்கார், வழங்கக் கூடாது? நாகர்கள் சிறுபான்மையினர் என்பதும் காஷ்மீர் கைநழுவிப்போய் விடுமோ என்கிற பயமும் தவிர வேறு காரணம் என்ன.

அடங்காப்பிடாரி மனைவிக்கு தோப்புக்கரணம் போடும் கணவனாயிருக்கிறது, இந்தியா, 'எப்படியாவது என் மனைவி என்கிற பெயர் நிலைத்தால்போதும்' என்கிற கருத்தில். காஷ்மீரம், தனக்கென ஒரு தனி அரசியலை அமைத்துக்கொண்டிருப்பது இதைத்தான் காட்டுகிறது.

★

# கண்ணீர் வடிக்கிறோம்

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [2—12—56] தனிப் பிரதி ௨ அணா [ இதழ் 22

அடுக்கப்பட்டிருந்த பிணங்களை, ஓடி ஓடி, அவர்தானா, அவர்தானா என்று அவரவர்களும் தேடிய காட்சியும், அகப்பட்ட பிணங்களைக் கட்டிக்கொண்டு 'குய்யோ! முறையோ!' என்று கூவிய கோரமும், கொடுமை—கொடுமை—கொடுமையினும் கொடுமை. கேட்டிடும்போதே, கேளாக் காதினராகப் பிறந்திருக்கக் கூடாதா, கண் குருடாயிருக்கலாகாதா, இதுபோன்ற கண்றாவிகளைக் காணவோ பிறந்தோம் இத்தமிழ்மண்மீது என்று துக்கம் அடைக்கின்றது நெஞ்சை. சடசடவெனச் சடலங்கள் உருளுவதையும், கோவெனக்கதறியபடி குழந்தையும் மாதரும் ஓடுவதையும், குண்டு வீச்சுக்கு இரையான பட்டினங்களில் பார்த்ததுண்டு, படங்களில்; படித்ததுண்டு ஏடுகளில். போர்க் குணம் கொண்ட புல்லர்கள் மீதே, அப்போது ஆத்திரமும் கோபமும் எழும்! இப்போது எதை நோவது? யாரைப் போய்க் கோபிப்பது? இதோ திருச்சி வரப் போகிறது, அது தாண்டினால் திண்டுக்கல், மதுரையில் இறங்கிக் கொஞ்சம் பழம் வாங்க வேண்டும், மணியாச்சி வந்துவிட்டால் தூத்துக்குடி வந்த மாதிரிதான் என்று எத்தனை இதயங்கள் எண்ணிய வண்ணம் இருந்தனவோ, அந்தப் பாழும் இரயிலில்! திருமணம் செய்து கொள்ளச் சென்றான் ஒரு வாலிபன்—உல்லாசப் பயணம் சென்றார் மாணவ மணிகளுடன் ஒரு பேராசிரியர்—திருப்பதி சென்று இராமேசுவரம் திரும்பிற்று ஒரு குழு—பெண்கள் வண்டி படு நாசம்— என்ஜின் டிரைவர் பட்டபாடு இதோ—இரண்டுமைலுக்கப்பால் வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு ஒதுங்கிய பிணங்கள் இவை—என்று ஏடுகளும், வானொலியும் அறிவிக்கின்றன. அவைகளைப் படிக்கும்போதும் கேட்கும்போதும், நம் உள்ளம் அடையும் வேதனை, நமது மாற்றாருக்குக் கூட வரக்கூடாது! ஒரு உயிரா, இரண்டு உயிரா, 147-பிணங்கள் அகப்பட்டன என்கிறது சர்க்கார். வெள்ளம் கொண்டுசென்று ஒதுக்கியதும், விபரம் தெரியாமல்போனதும் எத்தனையோ அறியோம். இருநூறுக்குமேல் கரமிழந்தும் தலையுடைந்தும் கால்பறிபோயும், அலங்கோலமாக்கப்பட்டார்கள் என்கின்றது சேதி. அகப்பட்ட 147-பிணங்களிலும் 70-க்கு மேல் உற்றார் உறவினரும் காணாத நிலையில், சர்க்காரே குழிவெட்டி, புதைத்துவிட்டதாம். அந்த 70-ம் யாரோ, அவர்களுக்குரியார் எவரோ, அவர்கள் இச்சேதி அறிந்தால் எப்படித் துடிப்பரோ, அந்த 70-ல் எத்தனை பேரை நம்பி எத்தனை குடும்பங்களிருக்கின்றனவோ, எண்ண எண்ண நெஞ்சத்தைப் பெரும் பாரம் அமுக்குகிறது. என்னே உலகம்! என்னே வாழ்வு! என்கிற விரக்திகூட அரும்புகிறது. பிணம் மலை போலிருந்ததாம். மருதையாறு செங்குருதி கலந்து ஓடிற்றாம். பிண நாற்றம் இரண்டுமைல் தொலைவுக்கு இருந்ததாம். ஐயகோ, விபரங்களை அறிய அறிய, வேதனைமேல் வேதனை தாக்குகிறது நம்மை. எப்படி ஆறுதல் கூற இயலும் இறந்தோரின் உறவினர்களுக்கு? கலங்கா உள்ளம் கொண்டவரெனக் கருதப்படும் புதுக் கோட்டை வல்லத்தரசே டில்லிப் பார்லிமெண்டில் கலங்கிக் கண்ணீர் வடித்தாராம். அவர்மட்டுமல்ல, அரியலூரில் நடைபெற்ற கோரச் சம்பவம் குறித்து, தமிழகமே தேம்புகிறது—உலகமே வருந்துகிறது — உள்ளபடியே நம்முடைய வாழ்நாளிலே இதுபோல ஒரு நெஞ்சு கொதிக்கும் சேதியை நாம் கேள்விப்பட்டதில்லை. இறந்துபோனோர், எவ்வளவு ஆசையுடன், எழும்பூரிலிருந்து கிளம்பியிருப்பர். அவர்தம் ஆசை மனைவியும் அருமைப் பெற்றோரும், அழகுமலர்களாம் குழந்தைகளும், அப்பா வருவார், அம்மாவரும் எனறு எவ்வளவு ஆவலோடு இருந்திருப்பர். அவர்களுக்கெல்லாம், இந்த இழவுச் செய்தி எட்டியதும் எப்படியிருந்திருக்கும்? என்ன பாடுபட்டிருப்பர். இந்தக் கோரத்தால் எத்தனை இல்லங்கள் தமது குடும்பத் தலைவனை இழந்திருக்கும்? எத்தனை வீடுகள், குடும்ப விளக்குகளை இழக்கும்? தாய்தந்தையற்றவர்களாக உலவப்போகும் குழந்தைகள் எத்தனையெத்தனை, தமது வாழ்வு நடாத்த இனி யார் துணை என்று அல்லாடப்போகும் தாய் தந்தையர் எத்தனைபேர், தாலி இழந்தவர்களாகக் காட்சியளிக்கப்போகும் நம்முடைய சகோதரிகள் எவ்வளவு பேர்—என்று நினைக்க நினைக்க, நம்மால் எழுதவும் இயலவில்லை — ஏடெல்லாம் கண்ணீராகிறது.

ஜங்கம்என்கிற இடத்தில் பாலம்தகர்ந்தது, இரயில் கவிழ்ந்தது, பலர் நாசம் என்று சேதி வந்தது,—பின்பு மகபூப் நகரில் பாலம் தகர்ந்தது, இரயில் கவிழ்ந்தது, மரணப்பட்டியல் இதோ என்று கேள்விப்பட்டோம் — இதோ, இன்று தமிழகத்திலும் பாலம் தகர்ந்தது, இரயில் கவிழ்ந்தது, பிணமலையைப் பார்க்கிறோம். இத்தனையும் ஒரே ஆண்டுக்குள், நிகழ்ந்திருக்கிறது! மூன்று விபத்துகளுக்கும் காரணம், பாலம் தகர்ந்தது என்பதுதான்! பாலங்களும், ஓடுகின்ற இரயிலும் பாராளும் பாரத புத்திரர்கள் அமைத்தது, அல்ல. வெள்ளையன் நிர்மாணித்தான் — உலகிலேயே மிகச் சிறந்ததோர் நிர்வாகம் என்று பெயரும் பெற்றான். அவன் போனதும், ஆளவந்தோரானோரின் காலத்தில், நிர்வாகம் சீருலைந்தது மட்டுமல்ல, சீர்திருத்தங்கள் எனும் பேரால் செல்வம் சீரழிக்கப்படுவது மட்டுமல்ல, எப்போதோ கட்டிய பாலங்களைச் சீரமைக்கவும், இயலாமற் போகிறது! ஒன்றன்பின்னொன்றாக மூன்று விபத்துகள் ஒரு ஆண்டுக்குள்—தவிக்கும் குடும்பங்கள், அநேகம். இந்த அலங்கோலத்தை எங்குபோய்ச் சொல்லுவது? டில்லியில் வாழும் அரசாங்கம் தன்னுடைய வரவு செலவை ஆண்டுதோறும் கணிப்பது போல, கணித்துக் காட்டுவதுண்டு இரயில்வே நிர்வாகம். ஒரு குட்டியரசு எனவும் கூறலாம். செலவினம் போதவில்லை, டிக்கட் கட்டணத்தை உயர்த்துகிறோம் என்றுகூறி, முன்பைவிட அதிகமான கட்டணமும் வசூலித்து, அதை வாரியிறைக்கிறது அவசியமற்ற பல செலவுகளுக்கு. ஆனால் பாலங்கள், இரயில்போகும் பாதைகள் மனிதர்களை விழுங்குகின்றன! மருதையாற்றின்மீதுள்ள இரயில்வே பாலம் 28-ஆண்டுகளாக எந்தவித சீர்கேடுமின்றி இருந்து வருவதாகும், எப்படியோ இப்போதுமட்டும் இப்படியாகிவிட்டது என்கிறது ஒரு அறிக்கை. 28-ஆண்டுகள் அப்படியே இருக்கிறதாம்! 28-ஆண்டுகள் பழையதாகியிருக்கிற பாலத்தை ஏனய்யா கவனிக்கவில்லை, என்று கண்ணீர் வடிக்கும் தமிழுலகம் கேட்காதெனும் எண்ணம் போலும். டில்லி ஆட்சிப்பீடம் காட்டவேண்டிய விஷயங்களில் சிரத்தையைக் காட்டுவதில்லை, ஆடம்பரமும், வீணாரவாரமும்தான் மிச்சமே ஒழிய, பாலங்கள் உடைவதும், பாதைகள் மோசமாவதுமான சம்பவங்கள் இந்நாட்டாண்டுக்காலத்தில் ஏராளம் நடந்திருக்கின்றன. அந்த உண்மையை, நாம் எல்லாம் உரைத்தபோது, அனைவருக்கும் கேலியாக இருந்தது. இப்போது இருநூறு பிணங்கள்!—என்று கேள்விப்பட்டதும், பண்டிதநேரு, பதறுகிறார். எங்கே இழி சொல்லும் ஏளனமும் தமக்கும் அரசுக்கும் வருமோ எனகிற காரணத்தால், பழியைத் துடைத்துக்கொள்ள லால்பகதூர் சாஸ்திரியையும் விலகச்சொல்லியிருக்கிறார். மகபூப் நகர் விபத்தைக் கண்டதும் ஓடோடிச் சென்ற லால்பகதூர் அரியலூர் நோக்கிவரவில்லை. ஆயினும், டில்லியில் இருந்துகொண்டு கண்ணீர் வடிக்கிறேன், கலங்குகிறேன் என்று அறிக்கை விடும் அன்பருக்கு, ஆற்றுப்பாலங்களைச் சீரமைப்பதில் ஏன் சிரத்தையும் கவனமும் இல்லாமற் போயிற்று! அவரைத் திறமைசாலி என்று செப்பியிருக்கிறார்நேரு! திறமைசாலியாக இருக்கக்கூடும்-காங்கிரஸ் கமிட்டிகளின் தகராறுகளைத் தீர்த்துவைப்பதிலும், தேர்தல் கமிட்டிகளை அமைப்பதிலும். ஆனால் அந்தத் திறமையும் புத்தியூகமும் ஏன் இந்தச் 'சாதாரண' விஷயத்தில் பயன்படவில்லை! ஒரு விபத்து — மற்றொரு விபத்து — என்றபோதே, அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பி, பாலங்களையும் பாதைகளையும் சரிவரக் கண்காணிக்கச் செய்யக்கூடாதா? விஞ்ஞானமும் மனித அறிவும் இரயிலைக் கண்டுபிடித்தது! அதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகளைச் செய்யாவிடினும், இதுபோன்ற தற்காப்புகளைச் செய்துகொள்ளக் கூடவா, சக்தியில்லை? இந்த இலட்சணத்தில் லால்பகதூருக்கு ஒரு துணை மந்திரி! அவருக்குத் தென்னாட்டிலுள்ள ஆறுகளும், அவைகளில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளங்களும் நன்கு புரியும். கடுமழை இங்கு கொட்டிக்கொண்டிருந்தபோது கனவான் இங்குதானிருந்தார்! ஏன், கவனம் செல்லவில்லை, இந்த விஷயத்தில். நேரமும் நினைப்பும் அடுத்த தேர்தலிலிருக்கிற அளவுக்கு, தான் ஏற்றிருக்கிற மந்திரிப் பதவியின் பொறுப்பு மீது இருந்தால்தானே? அப்படி இருந்திருப்பின் மருதையாறு பாலம் உடைந்து, மடியவாநேரும் இருநூறு பேர்! கொள்ளிடம் காவேரி போன்று பெரியதொரு ஆறுகூட அல்ல, மருதையாறு. சிறு ஆறு! அதன் பாலங்களைச் சரி பார்ப்பதும், செப்பனிடுவதும் சிரமமான காரியங்கூட அல்ல. எனினும் செய்யத்தவறி, இருநூறு குடும்பங்களை அவித்துவிட்டது! பிணமலையைக் குவித்துக் காட்டியிருக்கிறது—நமது உளமெலாம் துடிக்கவும் தமிழகமே துக்க வீடாகக் காட்சி அளிக்கவுமான துயரத்தை வாரித் தந்திருக்கிறது!!

இந்தக் கோரம், இருநூறு குடும்பங்களின் மனதைவிட்டுமல்ல, தமிழகத்தின் கவனத்தினின்றும் மறையாது. ஏனெனில் இறந்தோரில் பலர், நமது அண்ணன் தம்பிகள், அக்கா தங்கைகள். அவர்களின் உற்றாரையும் உறவினரையும் சந்திக்கும்போதெல்லாம், இந்தக் காட்சி கவனத்துக்கு வரும். மீளாத் துயரத்தை நிச்சயம் எழுப்பவே செய்யும். அழுதுகிடக்கும் அந்தக் குடும்பங்களுக்கும், அமங்கிலியாகிக் காட்சி தரும் நமது அன்னையருக்கும், நமது கண்ணீரைக் காணிக்கையாக்குவது தவிரவேறு வழியில்லை எமக்கு. விம்மும் குரலுடன் வேதனையும தாக்க, அனைவருடனும் நாமும் அழுகிறோம்—கதறுகிறோம்—கண்ணீர் வடிக்கிறோம்.

★

கற்பனை உரையாடல்

# தாசர்கள் யார்?

[பொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு, அதிகாரிகள் புடைசூழ, அந்த வட்டாரத்து சீமான்கள் உடன்வர, ஆனந்தத்தோடு போய் அமருகிறார், நிதியமைச்சர் சுப்பிரமணியம். தி. மு. க. வினரை ஒரு பிடி, பிடித்துவிட்டோம் என்கிற பரம திருப்தி, தெரிகிறது முகத்தில்]

ஒருவர்:-(M. L. A. சீட் தனக்கு விழும் என்று கருதிக்கொண்டிருப்பவர்) தீர்த்துக்கட்டிட்டீங்க! சண்டமாருதம் போலல்லவா இருந்துச்சு பேச்சு ...சோடாவிலே கொஞ்சம் 'ஷர்பத்' கலந்து கொண்டாரச் சொல்லட்டுங்களா!

பர்மிட்டுக் கிடைக்குமா என பார்க்க வந்தவர்:- சொல்லின் செல்வர்னா, உங்களுக்குத்தான் தகும்...... என்ன இருந்தாலும் வக்கீலுக்குப் படிச்சவங்கல்லியா ...

நிதி:- ஆமாம்! தி. மு. க. வுக்கு இவ்வளவு கூட்டம் வருமா?

1:- வரும்! சுமாரா வரும்! கொஞ்சம் அதிகமாக்கூட வரும்...ஆனா... அவங்களுக்கு இங்கே ஆதரவு இல்லே...

2:- நீங்க இன்னும் ஒரு இரண்டு தரம் இப்படி வந்து ஒருபிடி பிடிச்சிங்கின்னா...

1:- ஆமாம்! அவுங்களை வெள்ளைக்காரங்க தாசர்கள், இங்கிலீஷ்காரர்களுக்கு 'சோப்' போட்டவர்கள் என்று சொன்னீங்களே... பாயிண்டுன்னாலும் பாயிண்டு, பிரமாதமான பாயிண்டு! அது ஒண்ணே போதும், நம்ப எலெக்‌ஷன் பிரச்சாரத்துக்கு...

[ஒரு புன்முறுவல் வருகிறது, அமைச்சருக்கு. அப்போது ஒரு காங்கிரஸ் வாலிபர்...]

ஏங்க! எனக்கு ஒரு சந்தேகம்...?

1:- சந்தேகம் என்னடா வந்துச்சு உனக்கு இப்போ? எல்லாம் அப்புறம் கேட்டுக்கலாம்!...... ஏங்களைப்பாயிருக்கா...

நிதி:- அதெல்லாம் ஒண்ணுமில்லே... அவரு என்னமோ சந்தேகம்னாரே!

2:- அவன் அப்படிதாங்க! கட்சியிலே வெறி இருக்கிறதா காட்டிக்க, ஏதாவது கேட்பான்...

வாலி:- நிஜமாவே, ஒரு சந்தேகம்..

நிதி:- சொல்லு தம்பி! சந்தேகம் தான் அறிவுக்கு விருத்தின்னு நம்ம ராஜாஜி சொல்றதுண்டு... கேளு! என்ன சந்தேகம்...

வாலி:- ஏங்க! மெட்ராசிலே 'ஷீரீபு'ன்னு ஒரு பதவியிருக்கே, அது எதுக்குங்க...?

நிதி:- ஷெரீபுன்னு, நல்லமேதைங்க சமூகத்திலே அந்தஸ்து உள்ளவங்களை சர்க்காரிலே நியமிப்பாங்க. அவருக்கு ஐகோர்ட்டிலே, ஆபீசு இருக்கும். யாரை ஜூரர்களாகப் போடலாம் என்பது முதல் பல யோசனைகளைச் சொல்லலாம்...

வாலி:- அதாவது, கண்ணியமும் பொறுப்பும் மிகுந்த ஒரு பதவி தானுங்களே ...

நிதி:- ஆமாமாம்! நகரத்தின் கனவான்னு சொல்லலாம்...

வாலி:- ஏங்க, மெட்ராசுக்கு இப்ப, யாருங்க ஷெரீப்பாயிருக்கிறது!

[நிதி அமைச்சரின் முகம் கொஞ்சம் சுருங்குகிறது. பெயரை மறந்துவிட்டாரோ என்று கருதிய காரியதரிசி "காஸ்டல்! காஸ்டல்!" என்று முணுமுணுக்கிறார். நிதியமைச்சர், கவனியாததுபோல, வாலிபனை நோக்கி...]

ஏம்பா! இப்ப இதுதானா முக்கியம்? ஊம்......எத்தனையோ பிரச்னைகளிருக்கு அதைப்பற்றிக் கேட்காமெ...காலத்தையும் நேரத்தையும் வீணாக்காதீங்க இப்படி! நேருஜி சொல்வதைப் படிக்கல்லே பேப்பரிலே...

வா:- பேப்பர் படிக்கிறதாலே தாங்க இந்தச் சந்தேகம்...நம்ப கவர்னர் பேசியிருக்காரு...

நிதி:- என்ன பேசியிருக்காரு...

வா:- காஸ்டல் வந்து வெள்ளைக்காரர்... இருந்தாலும்...

[வாலிபர் முடிப்பதற்குள் 'சரி! சரி! நான்வரட்டுமா? அடுத்த ஊருக்கு சரியாக 7-மணிக்கெல்லாம் போயாகணும்' என்று சொல்லிக்கொண்டு கிளம்புகிறார், சுப்ரமணியம். கூட்ட முடித்து

---

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

நிர்வாகி

விட்டு வந்தபோது இருந்த களையில்லை இப்போது]

* * *

[நிதி அமைச்சரின் கார், கிண்டி கவர்னர் மாளிகைக்குள் போகிறது. சுப்ரமணியம் இறங்கி உள்ளே போகிறார். பம்பாய்க்குப் போவதற்காக மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டிருக்கும் பிரகாசா]

வாங்க! வாங்க! ஏது, இவ்வளவு தூரம்......ஏதாவது அர்ஜெண்டு விஷயமா?

நிதி:- அப்படியொண்ணுமில்லே...

பிர:- ஏன், இழுத்தாப்பலே பேசுறீங்க...

நிதி:- நீங்க ஊருக்கு கிளம்பறதுக்குள்ளே வேறெங்காவது விருந்து உபசாரம் ஏதாவது உண்டா...

பிர:- வேணும்னு சொல்லியனுப்புறேன்! எனக்கு என்னமோ ராஜபவனத்திலே சாப்பாடுன்னு பேரேஒழிய வருஷம் 365 நாளிலே 300 நாட்கள் வெளியிலேயே சாப்பாடா கழிஞ்சுப் போச்சு... ரொம்ப ருசியாயிருக்கு சாப்பாடு எல்லாம்...

நிதி:- நான் அதைப்பற்றிக் கேட்கவல்லீங்க...ஷரீப் காஸ்டெல் வச்ச விருந்திலே ஏதோ பேசினீங்களாமே...

பிர:- ஆமாம்! காஸ்டல் ஒரு வெள்ளைக்காரர். இவரை எப்படி ஷெரீபாக ஆக்கலாம்னு சிலபேரு கேட்டாங்க. நாம் வெள்ளையரோடு சுதந்திரம் வாங்க போராடியது உண்மைதான். அதற்காக இப்போதும் சண்டை போட்டுக்கொள்ள வேண்டுமா! முன்னைவிட இப்போதுதான் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நேசமும் பாசமும் அதிகமாயிருக்கு...அதன் சின்னம்தான் இங்கே காஸ்டல்துரை ஷெரீபாகயிருக்கிறது அப்படின்னு பேசினேன்!

நிதி:- கரெக்டா, பேசியிருக்கீங்க... அப்படித்தான் பேசணும்......பேசறதுக்கு உங்களுக்கா சொல்லித் தரணும்...ஹி...ஹி!...ஹி .........

நிதி:- என்னமோப்போல இழுக்கிறீங்களே? என்ன விசேஷம்.

நிதி:- இல்லே......இந்தப் பத்திரிகைக்காரங்களுக்குப் புத்தியே இல்லே; எதைப் பிரசுரம் செய்யலாம்செய்யக்கூடாதுன்னு கொஞ்சங்கூடத் தெரியல்லே...

பிர:- மிஸ்டர் சுப்ரமணியம், கொஞ்சம் சுருக்கமா, என்ன சொல்ல வந்தீங்க என்கிறதை சொல்லுங்க......

நிதி:- ஒண்ணுமில்லீங்க, நீங்க இப்படிப் பேசினதைப் பத்திரிகையிலே படிச்சிட்டு, வெளியூர்லேயெல்லாம் என்னைக் கேள்விகேட்க வந்துடுறாங்க...... அதனாலே....ஹி...ஹி....ஹி...! நான் வர்றேங்க......

*

[போகிற சுப்ரமணியத்தைப் பார்க்கிறார் பிரகாசா. உட்கார்ந்து தன்னுடைய காரியதரிசியிடம்...]

ஏன் இப்படி வந்து, ஏதோ விழிச்சிட்டுப் போறாரு சுப்ரமணியம்.

காரி:- அவரு விஷயம் உங்களுக்குத் தெரியாததா, இப்படித்தாங்க......விருவிருன்னு பேசுவாரு...விருவிருன்னு வருவாரு ...ஏதுக்கு, ஏன், எப்படிங்கிறது பற்றி கொஞ்சம் பின்னாலேதான் ஞாபகம் வரும்...

பிர:- அது சரி, இப்ப ஏன் இங்கே வந்தாரு? காஸ்டல் துரையைப்பற்றிப் பேசியதிலே என்ன குற்றம்.

காரி:- இவரு, இப்ப, தி. மு. கக்காரங்களைப்பற்றி போற இடமெல்லாம் வெள்ளைக்காரங்க தாசர்கள்னு பேசிவர்றாருங்க, இவுங்க ஆட்சியிலே ஒரு வெள்ளைக்காரருக்கு முக்கியமான பதவி கொடுத்திருப்பது தெரிஞ்சா பொதுஜனங்க கேள்வி கேட்டிருப்பாங்க.

பிர:- ஆமாம், இவரு ஏன் இப்படி சொத்தை வாதம் எல்லாம் கிளப்பறாரு......தி. மு. க-வைப் பற்றிப் பேச வேறெவிஷயம் இல்லியா?

காரி:- வேறு என்னங்க இருக்கு.

[என்று காரியதரிசி கூற பிரகாசா, அவரைக் கொஞ்சம் முறைத்துப் பார்த்துவிட்டு மௌனமாகிறார்]

*

## காஞ்சி காவேரி

கலிங்கம் என்று சரிதத்தில் குறிப்பிடக்கூடிய பகுதி இப்போதுள்ள ஒரிஸ்ஸா மாகாணம் எனலாம். இந்தக் கலிங்கத்துக்கும் தமிழகத்துக்கும் இருந்த தொடர்பினை அறிவோம் நாம்! பன்முறை தமிழ் மன்னர்கள் கலிங்கத்தை வென்றிருக்கிறார்கள் —காஞ்சியில் அரண்மனை வைத்திருந்த குலோத்துங்க சோழன் கலிங்கத்தை வென்ற வரலாறு பிரசித்தமானது. கலிங்கத்துப் பரணியே இருக்கிறது தமிழில்! காஞ்சிக்கும் கலிங்கத்துக்குமிடையில் நடைபெற்ற போர்களை விளக்கும் கதைகள், ஒரிஸ்ஸாவிலும் உள்ளதாம். அவைகளில் ஒன்றுதான் காஞ்சி காவேரி! காஞ்சியை ஆண்ட மன்னனின் மகள் பத்மாவதி, பூரி ராஜா புருஷோத்தம தேவனைக் காதலித்ததும், அதனால் காஞ்சிக்கும் ஒரிஸ்ஸாவுக்குமிடையில் போர் மூண்டதுமான பல சம்பவங்கள் கொண்டது இக்கதை. இதனை 75 ஆண்டுகளுக்கு முன்பு இராம்சங்கர் என்பவர் ஒரிஸ்ஸா மொழியில் நாடகமாக இயற்றியுள்ளார். இந்நாடகம் கடந்தவாரம் வானொலியில் நடிக்கப்பட்டது.

காஞ்சீபுரம்

2—12—'56

# தம்பி !

அமைச்சர் அடித்து அடித்துப் பேசுகிறாராம், வடக்கு தெற்கு என்றெல்லாம் பேசுவது தவறு—பெருந்தவறு—விஷமிகளின் கூக்குரல் என்று பேசுகிறாராம், போகுமிடமெல்லாம்!!

தெற்கே தொழில் சிறிதளவு குறைவுதான்—என்கிறார், உடனே மக்கள் ஆரவாரம் செய்கிறார்கள்—செய்ததும், குட்டம் பிடித்தவனைக் காண்பவர்கள், ஐயா! கொஞ்சம் எட்டி நில் என்று கூறியதும், கோபம்கொண்டு கண்டபடி ஏசுவானல்லவா, அந்நிலை பெற்றவராகி, "இதற்காக ஏன் கத்துகிறீர்கள்! யார் உங்களைத் தொழில் நடத்த வேண்டாமென்று சொன்னவர்கள்? யார் உங்கள் கையைப் பிடித்துத் தடுத்தவர்கள்?" என்று வெளுத்து வாங்குவதாக எண்ணிக்கொண்டு, வகைமுறை கெட்ட நிலையில் வசைமாரி பொழிந்து கொண்டு வருகிறாராம்!

இது, தம்பி! தொழில் நடத்த விரும்பியவரின் கையைப்பிடித்து மட்டுமல்ல, அவருடைய முதுகில் குத்தி, மூக்கினை அறுத்து, மூலையில் டில்லி உட்காரவைத்த சோகக்காதை.

வடக்கே தொழில்வளம் பெருகிவிட்டதே, தெற்கு தேய்ந்துவிட்டதே என்று பேசிக்கொண்டு இருப்பவர்களின் போக்குக்கூட இருக்கட்டும், தெற்கிலே தொழில் வளரவேண்டும், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு பிழைக்கும் வழி கிடைக்கவேண்டும், நேரு பண்டிதர் ஓயாமல் வற்புறுத்தி வருகிறாரே அதற்கேற்ப, உற்பத்தி பெருகவேண்டும், செல்வம் கொழிக்கவேண்டும் என்பதைப் பேச்சளவில் விட்டுவிடாமல், செயலுக்குக்கொண்டுவர விரும்பி, துவக்கிவிட்டுத் துடிதுடிக்கும் தொழிலதிபரின் துயர கீதம் இது.

தூத்துக்குடியிலும் அதன் வட்டாரத்திலும், உப்பளம் ஏராளம். இங்கு கிடைக்கும் இயற்கைப் பொருள்களைக்கொண்டு, மிகப்பெரிய சோடா உப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிட்டார்கள்.

சோடா உப்பும், அதனைத் தயாரிக்கும்போது உடன் தயாராகக்கூடிய குளோரைன்—குளோரைட்—இலிமினேட் — போன்றவைகளும், கனரகத் தொழிற்சாலைகளுக்கு மிகமிகத் தேவைப்படுவன.

தெற்கே, கனரகத் தொழில் வளர்ச்சி காணவேண்டுமானால், குளோரைட், குளோரைன், இலிமினேட், காஸ்டிக் சோடா, போன்ற இவைகளின் உற்பத்தி வளமாக வேண்டும்.

இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்றது, தூத்துக்குடி வட்டாரம், என்ற உண்மையை நிபுணர்கள் ஒப்புகின்றனர்.

## சுகஸ்தான்வாசி.....

சோடா உப்பும், இதுபோன்ற பொருள்களும், வெளிநாடுகளிலிருந்தே வரவழைக்கப்படுவது பொருள் பாழாகும் முறை, இந்த முறை நீடிக்குமட்டும் இங்கு புதுப் புது கனரகத் தொழில் வளருவது கடினம், எனவே சோடா உப்பு, உற்பத்தி செய்யும் பெரிய தொழிற்சாலை அமைப்பது அவசியம்தான் என்பதை இந்திய சர்க்காரின் பாதுகாப்பு அமைச்சர் குழுவே எடுத்துக் காட்டிற்று.

நிபுணர்கள் ஒப்பம் அளித்தனர், ஆய்வுக்குழுவினர் திட்டம் தேவைதான் என்றனர், இந்தப் பொருள்களை உபயோகிக்கும் பல்வேறு தொழிற்சாலையினரும், வரவேற்றனர்.

குறிப்பாக ஜவுளி ஆலைத் தொழிற்சாலையினர் மகிழ்ச்சி தெரிவித்தனர்; அனைவரும்கூடி இந்திய சர்க்காரிடம் முறையிட்டு, தூத்துக்குடியில் இந்தத் தொழில் துவக்கிட ஆதரவு அளிக்கவேண்டுமென்று வலியுறுத்தினர்.

இதுபோன்ற தொழிற்சாலை பெரிய அளவில், வேறு எங்கும் இல்லை.

இதற்கு கனரகத் தொழிற்சாலை ரசாயனப் பொருள் உற்பத்திக் கம்பெனி, அமைக்கப்பட்டது. மூலதனம் ஒரு கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

1953ம் ஆண்டில், இந்த ஒரு கோடி ரூபாய் கம்பெனியின் துவக்க விழா விமரிசையாக நடந்தேறியது.

துவக்க விழா நடத்தினவர் மைசூர் மகாராஜா!!

தம்பி! இப்போது அந்தத் தொழிற்சாலை இயங்கவில்லை!!

அது குறித்தே இந்தத் துயர கீதம் வெளிவந்திருக்கிறது.

ஒரு கோடி ரூபாய் முதல் திரட்டி, நடத்தத் திட்டமிட்டு மும்முரமாக ஆரம்ப வேலைகளை நடத்தி வெற்றி பெற்று, 17 இலட்ச ரூபாய் வரையிலே பங்குத் தொகை திரட்டிவிட்டனர். சென்னை சர்க்காரும், 10 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் தொழிற்சாலையில் பங்கு எடுத்துக்கொள்வதாக வாக்களித்தது.

இங்ஙனம் நிபுணர்களின் ஆதரவைப் பெற்று, பிரமுகர்களின் ஆசியைப்பெற்று, துவக்க விழாவிலே மைசூர் மகாராஜாவின் வாழ்த்துகளைப் பெற்றுத் துவக்கப்பட்ட தொழிற்சாலை, இன்று மூடு விழாவுக்கு முகூர்த்தம் பார்க்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டிருக்கிறது! ஏன் என்று நிதி அமைச்சரைக் கேள் தம்பி, ஏனா? உங்களால் முடியவில்லை! உங்கள் தெற்குக்கு அவ்வளவுதான் யோக்யதை!" என்று கொதித்துக் கூறுவார். ஆனால் அவருக்கும், உண்மை விளங்கினால், கோபமல்ல, கண்ணீர் வரும்.

தொழிற்சாலை அமைப்புக்காக நூறு ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது; பாதைகள், பாதை ஓரத்தில் மரம் செடி கொடிகள், காரியாலயக் கட்டிடங்கள், அவைகளைச் சுற்றி இராதிகள், காம்பவுண்டுகள், வேலிகள், தோட்டங்கள், யாவும் கட்டப்பட்டன.

சுவிட்சர்லாந்து நாட்டு விஞ்ஞானத் தொழில் நிபுணர்களின் கூட்டுறவு கேட்டுப் பெறப்பட்டது.

கிரெப் கம்பெனியார், இதற்கான இயந்திரம் தரவும், தொழிற்சாலையில் பணியாற்றவும் இசைந்ததுடன், தங்கள் பங்குத் தொகையாக 6-இலட்ச ரூபாய் அளிக்கவும் ஒப்புதல் அளித்தனர்.

சுவிட்சர்லாந்து நாட்டு நிபுணர்களுக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன!

சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து இயந்திரக் கருவிகள் வருவதற்கான ஏற்பாடு முடிந்துவிட்டது.

கிராம்ப்டன் கம்பெனியார் மின்சார சம்பந்தமான இயந்திரங்களை அனுப்பிவைத்துவிட்டனர்.

தொழிற்சாலை அமையும் இடத்தருகே வசதிக்காக இரயில்வே இலாகாவினர் விடுதி அமைத்தளித்து விட்டனர்.

குடிதண்ணீர் வசதிக்காகப் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டாகிவிட்டன.

தொழிலாளருக்கான விடுதிகள் கட்டுவதற்கான திட்டம் தயாராகி வேலை துவங்கிவிட்டது.

தொழிற்சாலையின் தேவைக்காகவென்றே, பாளையங் கோட்டையிலிருந்து தூத்துக்குடி வரையில் புதியபாதை அமைக்க ஏற்பாடாகி வேலை நடந்தேறி வருகிறது.

தம்பி! இந்த ஒவ்வொரு வேலை துவக்கப்பட்டு நடந்தேறியபோதும் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்று திட்டமிட்டவர்களின் மனதிலேயும், தொடர்புகொண்டவர்களின் மனதிலேயும் எத்தனை ஆசை ஊறியிருக்கும்.

வேலையற்ற மக்களில் எத்தனை ஆயிரம் பேர், இந்தப் புதிய தொழிற்சாலை எழுவது கேட்டும் கண்டும், இனித் தங்கள் கஷ்டம் தீரும் என்று கருதியிருப்பர்.

ஆனால், தம்பி! 1953-ல் மைசூர் மகாராஜாவால் துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை, இப்போது எந்த நிலையில் இருக்கிறது தெரியுமா? 1956 செப்டம்பர் திங்களில், துயரகீதம் பாடுகிறார்கள்!

துரோகம்! வஞ்சகம்! நம்பவைத்துக் கழுத்தறுப்பது! நம்பினோரை நட்டாற்றில் தள்ளுவது! தூங்கும்போது கல்லைத் தூக்கித் தலையில் போடுவது! — என்று பலப்பல கூறப்படுகிறதே, இந்தத் தொழிற்சாலைசம்பந்தமாகநடைபெற்றுள்ள சம்பவம், இவைகளை எல்லாம் தூக்கி அடிப்பதாக இருக்கிறது.

கனரகத் தொழிலுக்குத் தேவையான ரசாயனப் பொருள்களைத் தயாரிப்பதற்காக ஒருகோடி ரூபாய் மூலதனத்துடன் நடத்துவது என்றுதிட்டமிட்டுத்துவக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக ஒரு முறையும் வகுத்தனர்.

முதல் தவணை— அல்லது முதல் கட்டம் ஒன்று; இந்த முதல் கட்டத்தில் நாளொன்றுக்கு ஐந்து டன் சோடா உப்பு தயாராகும் அளவு வேலை நடத்துவது என்றும், ஐந்தாண்டுகள் இம்முறையில் வேலை செய்தான பிறகு, தினசரி பத்து டன் சோடா உப்பு தயாராகத்தக்கவிதத்தில் தொழிற்சாலையை விரிவுபடுத்துவதென்றும், முறை வகுத்துள்ளனர்.

தென்னாட்டிலே தொழில் வளம் ஏற்படவில்லை என்பதை அமைச்சர்களே ஒப்புக்கொண்டுள்ளனர்! வேண்டுமென்றே தென்னாடு புறக்கணிக்கப்படவில்லை; ஓரவஞ்சனை

நடைபெறவில்லை என்று சமாதானம் கூறுகின்றனர். தென்னாட்டிலே தொழில் நடத்த, பணம் படைத்தோரும், பணத்தைத் திரட்டக்கூடியவர்களும் முன்வர வேண்டும் என்று யோசனை கூறினர்; டாட்டா, பிர்லா என்று கூறி வயிற்றெரிச்சல்பட்டு என்ன பிரயோஜனம், உங்களுடைய அழகப்பாக்களை அழைத்துத் தொழில் நடத்தச் சொல்லுங்களேன் என்று கேலி பேசினர். அவ்விதம் புதிய தொழில்கள் துவக்கப்பட்டால் துரைத்தனம் வரவேற்கும், ஆதரவு அளிக்கும் என்று வாக்களித்தனர். இதனைக் காங்கிரஸ் பேச்சாளர்கள் நமக்கு அவ்வப்போது எடுத்துக் காட்டியும் வருகின்றனர்.

இப்போது, நடைபெற்று வரும் வேடிக்கையைக் கேள், தம்பி! கேள்!

இவ்வளவு வேலைகள் நடந்தான பிறகு—அதற்காகப் பல இலட்சம் செலவான பிறகு — மைசூர் மகாராஜாவின் திருக்கரத்தால் அஸ்திவாரம் அமைத்து, புதிய தொழிற்சாலைக்கான துவக்க ஏற்பாடுகள் பல செய்து முடித்து, நிபுணர்களை நியமித்து, வேலையைத் துவக்கியான பிறகு, இந்திய சர்க்கார் இந்தத் தொழிற்சாலை, தகுந்தபடி நடத்தப்படுமாஎன்பதிலேஎமக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது, என்று ஒரு 'கரடி'யை அவிழ்த்து விட்டிருக்கிறது.

நாளொன்றுக்கு 5-டன் சோடா உப்பு தயாராகும் என்கிறீர்களே— இதுதான் உமது உற்பத்தியின் அளவு என்றால், கட்டிவராதே தொழிலில் இலாபம் வராதே, வீண் கஷ்ட நஷ்டமல்லவா ஏற்படும்—இந்த நிலையில், புதிய தொழிற்சாலையை ஏன் கட்டிக் கொண்டு மாரடிக்கிறீர்கள்—விட்டுத் தொலையுங்கள் என்று இந்திய சர்க்கார், தமது மேலான, ஆலோசனையைக் கூறுகிறது.

எப்படி இந்தத் தொழிற்சாலையைச் சரியான முறையில் நடத்த முடியும்—செலவுக்கும், போடும் முதலுக்கும், எடுத்துக் கொள்ளும் கஷ்டத்துக்கும் ஏற்ற பலன் கிடைக்காதே, இதற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள் என்று இந்திய சர்க்கார், கேள்வி கேட்கிறது.

தம்பி! எல்லா விவரமும் ஆதாரமும் தேடித்தந்து, புள்ளிவிவரக் கணக்குக் காட்டி, திட்டத்தை விளக்கி, திட்டத்துக்கு நிபுணர்கள் ஒப்பம் அளித்ததையும் எடுத்துக் காட்டித்தான், 1953-ல், இந்திய சர்க்காரிடமிருந்து அனுமதி பெறப்பட்டது — இந்தப் புதிய தொழிற்சாலை துவக்க.

இப்போது, இரண்டாண்டுகளுக்குப் பிறகு, துவக்க விழா நடத்தி, ஊன்றிய விதை செடியான பிறகு, கல்லி எடுத்து வேர் ஆழச் சென்றிருக்கிறதா என்று பார்க்கச்சொல்வது போல, இந்தத் தொழிற்சாலை நடத்துவது இலாபகரமானதாக இருக்குமா என்பது பற்றி எமக்குப் பலமான சந்தேகம் ஏற்பட்டுவிட்டிருக்கிறது, என்ன சொல்கிறீர்கள் என்று டில்லியில் உள்ள சர்க்கார் கேட்கிறது.

மகள் ஆறுமாத கர்ப்பிணியான பிறகு, என் மருகன் குடும்பத்தை வளரச்செய்யக்கூடியவன் தானா என்பது பற்றிய ஐயப்பாடு எனக்கு ஏற்பட்டுவிட்டது, எனவே என் இல்லத்துக்கே அழைத்துச்செல்ல எண்ணிவிட்டேன் என்று கூறுபவர் உண்டா! டில்லி இருக்கிறது! ஆண்டு மூன்று ஆகிறது, அஸ்திவாரம் போட்டு! பல இலட்சங்கள் செலவாயின, துவக்க வேலைகளுக்கு! தொழிற்சாலைக்கான தளம் எழும்பிவிட்டது, பாதைகள் அமைந்துவிட்டன! இவ்வளவுக்குப் பிறகு, இந்திய சர்க்காருக்கு, பிள்ளை பிழைக்குமா? என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாமே, கேட்டனையோ இந்த வேடிக்கையை!!

துவக்கச் சொல்லேன் புதிய தொழிற்சாலைகளை, என்று பேசும் அமைச்சர்களுக்கு தம்பி! துவக்கிய பிறகு ஏற்பட்டுள்ள இந்தத் துயரச் 'சேதி' தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? என்ன செய்தார்கள்? கேட்டுப்பாரேன், காங்கிரசிலுள்ள நல்லவர்களை.

வெடிகுண்டு வீசுவது போல, இந்திய சர்க்கார் வீசிய கேள்வி இருந்தது. எனினும் புதியதொழிற்சாலை அமைப்பாளர்கள், இந்திய சர்க்காரின் சந்தேகத்தைப்போக்க, புள்ளி விவரங்களை மீண்டும் விளக்கி, 5-டன் உற்பத்தி என்பது, முதல் கட்டத்தில்தான், இரண்டாவது கட்டத்திலேயே நாளொன்றுக்கு பத்து டன் உற்பத்தியாகும், தொழில் கட்டிவரும், பணம் விரயமாகாது, உழைப்பு வீண்போகாது என்றெல்லாம் எடுத்துக்காட்டினர்.

இந்தச் சமாதானத்துக்கு, விளக்கத்துக்கு, இந்திய சர்க்கார் மறுப்பும் தரவில்லை, தமது பழைய புகாரையும்விட்டுவிடவில்லை.

தம்பி! நட்டாற்றில் விடுவது என்கிறார்களே, இது வேறு என்ன?

தூங்கும்போது கல்போடுவதும், துவக்கிட அனுமதி தந்து, வேலைகள் மளமளவென்று வளர்ந்திடும் போது, 'கட்டை' போடுவதும் வேறு வேறு!!

எண்ணிப்பார்க்கச் சொல்லு, நம்மை எல்லாம் பேதம் பிளவு பேசுவோர் என்று எண்ணிக் கொண்டு நிந்திக்கிறார்களே, காங்கிரஸ் நண்பர்கள், அவர்களை!

இத்துடன் இந்தச் சோகக் காதை நின்றுவிடவில்லை. இது போதும், வேதனையைக் ளைற, கதர்ச்சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு கழகத்தில் சேர! எனினும், மேலும் நடந்திருக்கும் 'வேலை'யையும் கூறுகிறேன், கேள், தம்பி.

1953-ல் ஆதாரம் காட்டி, அவசியத்தை வலியுறுத்தி புள்ளி விவரம் காட்டி, நிபுணர்களின் ஒப்பு


**வெளிவந்துவிட்டது**

**1957-ம் ஆண்டு திராவிடர் டயரி**

தி. மு. கழக முழு விவ்ரங்கள் 1200 தி. மு. க. கிளைகளின் விவரங்கள், பேச்சாளர் முகவரி, அஞ்சல் செய்திகள், வருமான வரி—விற்பனை வரி விவரங்கள், 360 பொன்மொழிகள் அடங்கியது. விலை ரூ. 1—0—0

விற்பனையாளர் கழிவு 20சதவீதம். செலவு தனி. 1 டயரி வேண்டுவோர் ரூ. 1—8—0 அனுப்பவும்.

குறிப்பு:-ஏராளமான புதுவித பொங்கல் வாழ்த்துக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**போர்வாள் அலுவலகம்,**

128, பிராட்வே, சென்னை-1.

தலைக் காட்டி, இந்தத் தொழிற்சாலை அமைக்க அனுமதி பெற்றனர்.

*1955*-ல் தூத்துக்குடிக்கு அருகேயே, இதுபோன்ற வகையான புதிய தொழிற்சாலை அமைக்க, வேறோர் தரப்பினருக்கு, இந்திய சர்க்கார் அனுமதி அளித்தனர்.

*1953*-ல் அனுமதி அளித்து வேலையைத் துவக்கிய தொழிற்சாலை, உற்பத்திசெய்யும் அளவு போதாது என்பதைக் கண்டான பிறகு, மேலும் உற்பத்தியை அதிகமாக்கும் வழி அந்தத் தொழிற்சாலைக்கு இல்லை என்பதைக் கண்டறிந்த பிறகு, மற்றோர் தொழிற்சாலைக்கு அனுமதி தந்தனரா இந்திய சர்க்கார்? இல்லை, தம்பி, இல்லை.

*1953*-ல் துவக்கப்பட்ட தொழிற்சாலை, உற்பத்தி செய்திடும் இலக்கு வரவில்லை—முயற்சி மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தச் சமயத்திலே, அதே வட்டாரத்தில் வேறோர் தொழிற்சாலைக்கு அனுமதி அளிப்பது ஏன்?

நீதியும் நியாயமும் மடிந்திடக் கூடாது என்ற நல்லெண்ணம் கொண்ட எவரும், அவர் எந்தக் கட்சியில் இருப்பினும், கேட்க வேண்டிய கேள்வி அல்லவா இது? கேட்பார்களா?

*1953*-ல் அனுமதி அளித்தது, சோடா உப்பு தயாரிக்க! *1955*-ல் புதிய தொழிற்சாலைக்கு அனுமதி அளித்திருக்கிறோம் என்றால், அது சோடா உப்பு தயாரிக்க அல்ல, சோடா சாம்பல் தாயாரிக்க!—என்று சமாதானம் கூறிட சர்க்காருக்கு மனம் இடம் தருகிறது.

தம்பி! பெயர் ஒன்றுக்கு சோடா உப்பு—Caustic Sodo—மற்றொன்றுக்கு Soda Ash—சோடா சாம்பல் என்று இருக்கிறதே தவிர, தொழில் முறை, உற்பத்தி வகை ஆகியவை ஒரேவிதம்தான்! எனினும் சர்க்கார் நடத்திய இந்தத் திருவிளையாடலை, சொற்சிலம்பம் செய்து மறைத்திட முயற்சிக்கிறது!

பல் ஆஸ்பத்திரிக்குப் போவானேன் — பல ரூபாய் பாழாக்கிக் கொள்வானேன் என்பதற்காகத்தான், நாலைந்து அறைகொடுத்து இவனுடைய பற்கள் கீழே உதிர்ந்திடச் செய்தேன் என்று போதையில் உள்ள காலி கூடப் பேசமாட்டான். பொறுப்பு அறிந்த சர்க்கார், பொன்னுடாக இருந்த தென்னகம் தேய்ந்திருக்கிறது, மீண்டும் இங்கு திருவும் தெம்பும் ஏற்படப் புதிய தொழில்களை அமைத்தாக வேண்டும் என்ற நோக்கத்துடன் பணியாற்ற வேண்டிய சர்க்கார்,

> உங்கள் தொழிற்சாலை, 'கட்டிவரக்கூடிய' முறையில் இல்லை என்று நாங்கள் கருதுவதால், இது நடைபெறுவதைக் குறித்துப் பலமாகச் சந்தேகப்படுகிறோம் என்று சாக்கு கூறிவிட்டு, இது போன்ற வகையினதாகவே வேறோர் தொழிற்சாலை நடத்த, மற்றொருவருக்கு அனுமதி அளித்திருக்கிறது.
>
> இதனை அறம் என்று கூற' யார் முன்வருவர்?
>
> இதனை நேர்மையான அரசியல் என்று கூறும் துணிவு கூட எவருக்கும் எழாதே!

*1953*-ல் ஏற்பட்ட தொழிற்சாலை Caustic Soda தயாரிக்க; *1955*-ல் அனுமதி பெற்றிருப்பது Soda Ash தயாரிக்க என்று சொல்லை வைத்துக்கொண்டு 'ஜாலம்' செய்தார்கள்!!

உன் கடையில் இட்லி சாம்பார்! அவன் கடை உன் கடைக்குப் போட்டியாக நான் கிளப்பிவிடுவது என்று எண்ணிக்கொள்ளாதே, அவன் கடையில் இட்லி சட்னிதான், சாம்பார் கிடையாது, என்று சொன்னால், அதற்குப் பெயர் சமாதானமா!!

சிலநாள்தான் இந்தப் போலி வாதம் கூட!

இப்போது, *1955*ல் அனுமதி பெற்ற, புதிய தொழிற்சாலையினர் (Caustic Soda) சோடா உப்பு தயாரிக்கவும் உரிமை பெற்றுவிட்டார்கள்!

இப்போது நிலைமை என்ன என்பதை எண்ணிப்பார்த்திடலாம், வா, தம்பி!

ஒரு கோடி ரூபாய் மூலதனம் ஏற்பாடு செய்து, அதற்கான பங்கு பெற, என்னென்ன முயற்சிகளில் ஈடுபட வேண்டுமோ அவை யாவும் செய்து முடித்து, துவக்க விழா நடாத்தி, வேலையைத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறது, *1953*ல் அனுமதி பெற்ற கம்பெனி.

இதற்குக் கழுத்தில் கத்திவைப்பது போல, அதே தூத்துக்குடி வட்டாரத்திலேயே, வேறோர் அமைப்புக்கு அனுமதி வழங்கிற்று, டில்லி.

வாழவைக்கும் வழியா இது? தொழிலை வளர்த்திடும் இலட்சணமா? மூன்று ஆண்டுகள் முயற்சியும், செலவான பணமும் குப்பைதானே!!

தம்பி! இனி, இந்தத் துயரச் சேதியின் உச்சத்தைக் கவனி.

*1953*ல் அனுமதிபெற்று, இப்போது வேலைசெய்துகொண்டிருக்கும் கம்பெனிக்கு அமைப்பாளர், ரோச் விக்டோரியா!

*1955*ல் அனுமதிபெற்றுக்கிளம்ப வந்திருக்கும் கம்பெனி T.V. சுந்தரம் ஐயங்காருடையது!!

பக்கத்திலே, யாராவது, 'பாரத மாதாவின் பிள்ளை' இருந்தால், இந்தச் சேதியைக் கூறிவிட்டு, அவர் முகத்தைக் கவனித்துப் பார், தம்பி!

ரோச்விக்டோரியா தூத்துக்குடித்தொழிலதிபர் — காங்கிரஸ்காரர், இப்போதைய M. L. A. முன்னாள் காங்கிரஸ் அமைச்சர்!

T. V. சுந்தரம் ஐயங்கார், காங்கிரஸ்காரராக இருந்ததில்லை!

ரோச் விக்டோரியாவின் முயற்சியில் மண்ணைப்போடுவானேன்? சுந்தரம் ஐயங்கார் கம்பெனிக்கு சந்தன தாம்பூலம் அளிப்பானேன்?

ரோச் விக்டோரியா மூன்றாண்டுகளாக எடுத்துக்கொண்ட முயற்சி என்ன கதி ஆவது?

அஸ்திவார விழாவன்று அவர், பாபம், மைசூர் மகாராஜாவின் பக்கத்திலே நின்றுகொண்டு, பூரிப்புடன், புதிய தொழிற்சாலை பற்றிப் பேசியபோது, அவருடைய மனக்கண் முன்பு, ஓங்கி நிற்கும் புகை போக்கிகளும், உருண்டு கிடக்கும்

இருப்புச் சக்கரங்களும், உற்பத்தியாகும் சரக்குகளும், அவைகளை ஏற்றிச் செல்லும் பெட்டிகளும், கிடைத்திடும் இலாபத்தைக் கொட்டிவைத்திடும் கொட்டடியும், இலாபம் தேடித்தர உழைத்திடும் பல்லாயிரம் பாட்டாளிகளும், தோன்றி இருந்திருக்கக்கூடும்!

நாமோ காங்கிரஸ்காரர், கழகம் அல்ல!

பிரமுகர் வரிசையிலே மட்டுமல்ல தொழில் அதிபர் பட்டியலிலே, நமது பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது!

காங்கிரஸ் அமைச்சராகவேகூட இருந்திருக்கிறோம்.

வல்லவனுக்கு, வடக்காவது தெற்காவது — எல்லாம் ஒன்றுதான்!!

டில்லியில் நமது குரலுக்கு மதிப்பு எப்படியும் இருந்தே தீரும் என்று பலப்பல எண்ணிக்கொண்டிருந்திருப்பார்;

எல்லாவற்றிலும் இடிவிழுவது போல, 1955ல் T. V. S. கம்பெனிக்கு அனுமதி அளித்தது, இந்திய சர்க்கார்.

இப்படி ஒரு பேரிடி வந்து விழும் என்று, ரோச் எப்படிக் கருதியிருக்க முடியும். தொழிற்சாலை அமைப்பிலே தீவிரமாக ஈடுபட்டார். தேவையான இயந்திரங்கள் அனுப்பப் படுவதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதால், ரோச் விக்டோரியா, சுவிட்சர்லாந்து நாட்டுக்கே சென்று இயந்திரங்களைச் சேகரம் செய்தாராம்!

தொழிற்சாலையோ புதிது, ஆனால் தேவையானது; மூலதனமோ ஒருகோடி; முயற்சியில் ஈடுபட்டவரோ தொழிலதிபர்; வளர்ச்சியோ குறிப்பிடத்தக்க அளவில்; எனினும் 1955-ல் T.V.S. கம்பெனிக்குப் புதிய அனுமதி கிடைக்கிறது! நிலைமையை, இப்போது ஆராய்ந்து பார்க்கலாம், நமது காங்கிரஸ் நண்பர்கள்!

வெட்கமாகவும் இருக்கிறது, வேதனையாகவும் இருக்கிறது என்று கூறுவர் இரண்டோர் காங்கிரஸ்காரராவது; அவர்களைக் கண்ணீர் விடச் சொல்லாதே, தம்பி, இன்னுமோர் 'சேதி'யைக் கேட்டுவிட்டு, பிறகு வேண்டுமானால், வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளட்டும்.

**ரோச்விக்டோரியாவின் முயற்சிக்கு உலைவைக்கத்தக்கதாக, T. V. S. கம்பெனியார், புதிய தொழிற்சாலைக்கு அனுமதி பெற்றார்களல்லவா, அவர்கள் அந்த அனுமதியை தாரங்கதரா ரசாயன தொழிற்சாலை எனும் வேறோர் கம்பெனிக்கு மாற்றிக் கொடுத்துவிட்டார்கள்! இந்தக் கம்பெனி, வடநாட்டுக்காரருடையது!**

தம்பி! சம்பூரணமாகிவிட்டதல்லவா, நோராயணம்! இப்போது, சொல்லச் சொல்லு வடநாடு என்ன போக்கில் தென்னாட்டை நடத்துகிறது என்று.

துக்கம்தொண்டையை அடைக்கிறது என்பர் தூய உள்ளத்தை இழந்திடாத, காங்கிரசார்.

சென்னை சர்க்காரிடம் முறையிடலாமே! காமராஜர், தமிழராமே, தமிழ் நாட்டுக்குத் தாழ்வு வரவிடமாட்டாராமே! அவரிடம் மனுச் செய்யலாமே!-என்று முணுமுணுப்பர், சிலர்.

எல்லா முறைகளையும் செய்து பார்த்து, மூக்கறுபட்ட நிலைக்கு வந்துற்ற பிறகுதான், மாஜி மந்திரியும், இன்றைய காங்கிரஸ் M.L.A.யுமான, ரோச்விக்டோரியாவே 1956 செப்டம்பரில், இந்தத் துயரச் 'சேதி'யை அச்சிட்டு, அனைவருக்கும் வழங்கி இருக்கிறார்!

இப்படியெல்லாம் இடுக்கண் வந்துற்றதால், என் முயற்சியை விட்டுவிடுகிறேன் என்று அவர் அந்த அறிக்கையில் கூறவில்லை.

இப்படி எல்லாம் நடப்பதால், நண்பர்களே! நாட்டவரே! விழிமின்! எழுமின்! இந்த விபரீதப்போக்கை களைமின்! என்று முழக்கமிடும் முறையிலே அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மாளிகையின் பெயர் சுகஸ்தான் என்று தெரிகிறது! தம்பி! சுகஸ்தானில் இருப்பவருக்கே, திராவிடஸ்தான் அமைந்தாலன்றி நாடு வாழ வழி ஏற்படாது என்று புத்துணர்வு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்— அவ்வளவு வேதனைக்குரல் தெரிகிறது அந்த அறிக்கையில்.

சென்னை சர்க்காரால் செயலாற்ற முடியவில்லை.

சென்னை சர்க்காருக்கு அதிகாரம் இல்லை.

மத்திய சர்க்காருடைய 'லகா'னில் நாம் இருக்கிறோம்.

இந்தநிலை இருக்குமட்டும் இங்கு வாழ்வும் வளமும் கிடைக்காது.

எனவே அனைவரும் ஒன்றுகூடி எழுமின்.

இந்த இராஜ்யத்துப் பொருளாதார சுதந்திரம் பறிபோகாமல், தடுத்து நிறுத்த வேண்டும்.

உடனே! உடனே! அனைவரும் அனைவரும்!!

இந்த முறையிலே இருக்கிறது. சுகஸ்தானத்திலிருந்து வெளிவரும் அறிக்கை!

பட்டால்தான் தெரிகிறது பலருக்கும்.

உன் அண்ணன், துரும்பைத் தூணாக்கிக் காட்டுகிறான், ரோச் விக்டோரியா காங்கிரஸ்காரர், அவர் இதுபோலெல்லாம் கூறியிருக்கமாட்டார் என்று, தம்பி, உன்னிடம், யாரேனும் சில காங்கிரஸ் நண்பர்கள் வாதாட வருவர். அவர்களின் மேலான பார்வைக்கு, இதோ இந்தப் பகுதியைக் காட்டு; இது ரோச் விக்டோரியா வெளியிட்ட ஆங்கில அறிக்கையில் உள்ள வாசகியங்கள்.

---

> "நபிஅவர்களின் மார்க்கம் நடைமுறைக் கேற்றது. நடைமுறைக் கேற்ற அவருடைய நல்லறிவையும் எடுத்துக்காட்டுகிறது. அடைய முடியாத குறிக்கோளையோ, குழம்பிய சித்தாந்தங்களையோ மறைபொருளான தத்துவங்களையோ, குரு மார்க்க ஆதிக்கத்தையோ பற்றி அது கூறவே இல்லை."
>
> —பேராசிரியர்
>
> பி. கே. ஹிட்டி.

The Madras Government have been approached several times, the Legislators of the Tinnevelly district have also made representations on behalf of the South Indian Venture, and the public were looking to the state government to give an encouragement to the scheme.

The Madras Government is however helpless in the matter, for the Government of India in the Commerce and industries department are dictating the policy as to what should be done or what should not be done in the State of Madras.

WE ARE TIED TO THE APRON STRINGS OF THE CENTRAL GOVERNMENT.

It is time therefore that all those who are interested in the industrial development of the South, should join hands and see to it that the economic freedom of the State in particular and the South as a whole, is not taken away from us

*சென்னை சர்க்காரிடம் பலமுறை முறையிட்டோம்—பயனில்லை, காரணம், இந்திய சர்க்காரிடமே இந்த அதிகாரம் இருக்கிறது, மத்திய சர்க்காரின் முந்தானையில் முடி போட்டு வைக்கப்பட்டிருக்கிறது சென்னை-தென்னகத்துத் தொழில் வளர்ச்சியில் அக்கறைகொண்டோரனைவரும், செயலாற்றி, இந்த இராஜ்யத்துக்கு சிறப்பாகவும், பொதுவாகத் தென்னகத்துக்கும் உள்ள பொருளாதார சுதந்திரம் பறிபோகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை, காரசாரமான முறையிலே ஆங்கில மொழியிலே, ரோச் வெளியிட்டிருக்கிறார்.*

*தாம் ஈடுபட்ட ஒரு தொழில் முயற்சியிலே ஏற்பட்ட இடுக்கண், அதிலே டில்லி சர்க்கார் காட்டிய போக்கு, அதிலே சென்னை சர்க்காரின் செயலற்ற தன்மை, அதிகாரமற்ற நிலை, இது மனதிலே உறுத்தியதும், ரோச் விக்டோரியா, தாமோர் காங்கிரஸ்காரர், அமைச்சராகக் கூட இருந்தவர், பாரதநாடு என்ற பரந்த மனப்பான்மையைக்கொள்ள வேண்டியவர் என்ற எதற்கும் கட்டுப்பட முடியா நிலைபெற்று, கொதித்தெழுந்து, கேண்மின்! தோழர்காள்! கேண்மின்! என்று கூவுகிறார். எங்கே போயிற்று, டில்லி போதிக்கும் தேசியம்!! போலிதானே!! சமயத்திலே, அந்தத் தேசியம், தேய்கிறது மாய்கிறது, இயற்கை உணர்ச்சிதான் மேலோங்கி வருகிறது!!*

ரோச்விக்டோரியா *இந்த நிலையைக் கண்டதால், இனிநாட்டுக்குமத்திய சர்க்காரின் ஆதிக்கப் போக்கை எடுத்துக்காட்டி, இந்த இராஜ்யத்துக்கும், தென்னகத்துக்கும், பொருளாதார சுதந்திரம் கிடைத்திடச் செய்யும் பணியில் ஈடுபட முற்படுவாரா, என்று என்னைக் கேட்டுவிடாதே, நான் திருப்பி உன்னைக் கேட்பேன், கவர்னராக இருந்த நிலையிலேயே, கொதித்துப் பேசினாரே இதுபோல், குமாரசாமி ராஜா, அவர் என்ன செய்தார் பிறகு, என்று!*

*இவர் போன்றாரின் பேச்சு, நாம் மேற்கொண்டுள்ள கொள்கை, அப்பழுக்கற்றது என்பதை நமக்கு உறுதிப்படுத்த உதவுவது, வேறு விளைவுகளை நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்த்துப் பயன் இல்லை.*

*சோடா உப்புக்கு அனுமதி கிடைத்தும் பயனில்லை என்றால், இத்தகைய முதலாளிமார்களுக்கு சுவை ஊட்ட டில்லியிடம் வேறு பண்டங்களா கிடைக்காது! இவர்களும், நாடு வஞ்சிக்கப்படுகிறது நாங்கள் இதற்கு உடந்தையாக இருக்கமாட்டோம், உயர் பதவி தந்தாலும் வேண்டோம், இலாபச் சுவை ஊட்டினாலும் சிந்தமாட்டோம், என்று சீறிப் போரிடக் கிளம்புவர்?*

*சுகஸ்தானத்தில் அல்லவா அவர்கள் வாசம்!*


*தம்பி! உனக்கும் எனக்கும், நம்போல, உள்ளவர்களுக்கும்தான் இந்தப் பிரச்சினை குறித்து தொடர்ந்து பணியாற்றி வெற்றி காணும் பொறுப்பு ஏற்பட்டுவிட்டிருக்கிறது. அந்தப் பணியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்—இடையிடையே எரிச்சல் காரணமாகவோ ஏமாற்றம் கண்டதாலோ, இப்படிச் சிலர், உண்மை நிலைமையை எடுத்துக் கூறும்போது, நாம் மேற்கொண்டுள்ள பணி நியாயமானதுதான் என்று நமக்கு உறுதியும் உவகையும் ஏற்படுகிறது! அதுவரையில் அவர்கட்கு நாம் நன்றி கூறிக்கொள்ளத்தானே, வேண்டும்.*

*நாளைக்கே, ரோச் விக்டோரியாவுக்கு சாந்தியும் சமாதானமும் சந்தோஷமும்கூட அளித்திடும் சக்தி டில்லிக்கு உண்டு—பெற்றுத் தருவதாகச் சாகசம் செய்யும் திறம் காமராஜ் சர்க்காருக்கு நிரம்ப உண்டு! எனவே, மீண்டும் அவர்கள் இந்தியா—இந்தியர்—என்று பஜிக்கத்தொடங்கிவிடக் கூடும். ஆனால், அவர்களின் இந்தத் தேசிய பஜனை, உதட்டளவு என்பதும், உள்ளத்தில் இடம்பெற்றதல்ல என்பதும், அவ்வப்போது, பீறிட்டுக்கொண்டு வருகிற பேச்சுகளிலே தெரிகிறதல்லவா! அது நல்லதல்லவா, நமக்கும் நாட்டுக்கும்! அதனாலேயே, இந்தச் சம்பவத்தை எடுத்துக் கூறினேன், உனக்கும் உன் மூலம், நாட்டவருக்கும்.*

*ஆனால், இதுமட்டும் போதுமா! பிற இடங்கட்கும், உலகுக்கும். இந்தச் சம்பவங்களை எடுத்துக் காட்டி, நமது கழகத்தின் நோக்கத்தை விளக்க வேண்டாமா?* ஆங்கில ஏடுமூலம்தானே அதனைச் செய்ய முடியும்.

*ஆம்! அண்ணா! என்றுதான் சொல்கிறாய்! அன்புடன் சொல்கிறாய்! ஆனால்,* சந்தா? *அது வரக்காணோமே!!*

*அன்பன்,*



# THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்

**60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1**

KNOWLEDGE IS POWER

## தமிழ்

## எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

## ஒரே

## வருடத்தில்

இலக்கண ரீதியாக

# இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட நவம்பர் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட நவம்பரில் முடிவடைந்தன.

## புதிய வகுப்புகள்

**டிசம்பர் 10-ந் தேதி**

**ஆரம்பமாகின்றன**

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

**கடைசி தேதி 9--12--1956**

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் வகுப்பிற்கு வந்து ஒருமணி நேரம் படித்தால் போதுமானது.

## முக்கிய அறிவிப்பு:-

16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

---

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

# தணலில் தங்கம்

11

மா. கி. தசரதன்

அப்பா எண்ணியபடியே எல்லாம் முடிந்துவிட்டன. பிறந்த மண்ணைத் துறந்து இந்தச் சென்னையின் மக்கள் வெள்ளத்தில் கலந்துவிட்டோம்.

ஊரில் இருந்ததைவிட அப்பாவும் அம்மாவும் இங்கு எவ்வளவோ மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அம்மா முதலில் கொஞ்சம் தயங்கினார்கள் என்றாலும் முன்பின் தெரியாத இளம் பெண்கள் "பாட்டி பாட்டி" என்று தன்னைச் சூழ்ந்து கொள்வதைக் கண்டு அவர்கள் எவ்வளவோ மாறி விட்டார்கள். அப்பாவோ இங்கேயே பிறந்து வளர்ந்தவரைப்போல ஆகி விட்டார். நாங்கள் வந்தபோது வெறும் திடலாகக் கிடந்த வெளி யெல்லாம் இப்போது பச்சைப் பசேல் எனப் பூவும் காயுமாகக் காணக் களிப் பூட்டுகின்றது. கணவர் ஊரில் இருந்த பள்ளிக்கூடத்துத் தோட்டம் போல் கண்ணுக்கு அழகாக விளங்கி யது.

மேல் துண்டைத் தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டு இங்கும் அங்கும் அலைந்து தோட்டக்காரரை அப்பா ஏவல் கொள்ளுவதைக் காணும்போ தெல்லாம் கருங்குழலி அம்மையார், "பெருஞ் செல்வம்; இல்லத்திற்குப் பெருஞ் செல்வம்" என்று மெல்லச் சொல்லுவார். எல்லோரும் கலகலப் பாக இருந்ததைக் கண்டு எனக் கும் அப்படி இருக்க ஆவல் எழும். ஆனால் அப்போதெல்லாம் எழுவதும் உட்காருவதுமே எனக்குப் பெரு முயற்சிகளாயின. "அக்கா அக்கா" என்று ஆவலுடன் ஓடிவரும் குழந்தைகளுடன் விளையாட இயல வில்லையே என வருந்தினேன்.

ஆனால் அந்த வருத்தமெல்லாம் ஒருநாள் தீர்ந்துபோயிற்று.

என் பக்கத்தில் கிடந்து தன் சின் னஞ் சிறு கால்களையும் கைகளையும் ஆட்டி ஆட்டிக் "குவா குவா" என அழுத என் செல்வத்தைக் கண்ட தும்மகிழ்ச்சியில்திளைத்துப்போனேன். என் எண்ணமெல்லாம் எப்போதும் அந்தச் சின்ன உடலைச் சுற்றியே இருந்தது. எப்போதோ ஒருமுறை கணவருடைய நினைவு வந்து வருத் தும். ஆனால் அந்த வருத்தம் இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டவள் என் செல்வம்தான்.

'பேர்த்தியா பேரனா' என்று வாதிட்ட பாட்டியும் பாட்டனும் என்ன பேசிக்கொள்கின்றார்கள் என்றுஅறிய ஆவலாய் இருந்தேன்.

ஒரு நாள் அப்பாவும் அம்மாவும் என் அறையில் உட்கார்ந்து பேர்த் தியை எடுத்துவைத்துக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். அப்பாவை விட அம்மாவின் மகிழ்ச்சி பெரிதா அம்மாவைவிட அப்பாவின் மகிழ்ச்சி பெரிதா என்று அறிவதே இயலா திருந்தது.

"என்ன பார்த்தாயா என் பந்தயம் தானே வென்றது?" என்றார் அப்பா.

"சரிதான் போங்கள். ஏதோ அப் போது சொன்னால் அதை இன்னும் சொல்லிக்கொண்டு" என்று சொல்லி அப்பாவிடமிருந்த பேர்த்தியைத் தன் கையில் ஏற்றுக்கொண்டார் அம்மா.

"என்ன ஆராய்ச்சி! பேர்த்திக்குப் பெயர் என்ன வைப்பது என்று?" என்று கேட்டுக்கொண்டே கருங்குழலி அம்மையார் உள்ளே வந்தார்கள்.

அதுவரை நான் அதைப்பற்றியே சிந்திக்கவில்லை. குழந்தையைக் கையில் எடுத்துவைத்துக்கொண்டு "கண்ணு" "அம்மாடா" "ராஜா" என்று ஏதேதோ சொல்லியிருக்கின் றேனே ஒழிய பெயர் என்ன வைப் பது என்று சிந்திக்கவே இல்லை. என்தோழி ஒருத்தி சொன்னாள் அவளுக்குப் பிறப்பது ஆணாக இருந் தால் இன்ன பெயரும் பெண்ணானால் இன்ன பெயரும் வைப்பது என்று ஏழாம் மாதமே அவள் கணவன் சொல்லிவிட்டாராம். ஆனால் எனக்கோ கணவன், பிள்ளைக்குப் பெயர்வைக்கும் பேறு கிட்டவில்லை. அந்த அம்மாவே ஏதாவது ஒரு பெயர் வைக்கட்டுமே என்று நினைந் தேன்.

"நீங்கள்தான் ஒரு பெயர் சொல் லுங்கள்" என்றார் அப்பா.

"என்னையா பெயர் வைக்கச் சொல்லுகின்றீர்கள்" என்று சற்று நேரம் யோசிப்பதுபோல் இருந்தார். மேலும் கீழும் பார்த்தார்.

"சரி, இந்தக் கண்ணகி இல்லத் தில் பிறக்கும் முதல் குழந்தைக்குக் கண்ணகியின் மகள் மணிமேகலையின் பெயரே இருக்கட்டும்" என்றார்.

"என்ன மணிமேகலை கண்ணகி யின் மகளா? மாதவி மகள் அல்லவா" என்று கேட்டேன் நான்.

"பிறப்பால் அப்படித்தான், ஆனால் அந்த மாதவியே மணிமேகலையைத் தன் மகள் என்று சொல்லாமல் கண்ணகியின் மகள் என்று சொல்லி இருக்கிறாள்" என்றார்.

"ஏன்?" என்றேன்.

"தன் மகள் என்பதைவிடக் கண்ணகியின் மகள் என்றால் சமுதா யத்தில் மணிமேகலைக்குச் சிறப்பு இருக்கும் என்றுதான்."

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம் இந்தமுறையில்இப்போது ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. எனக்குத் தெரிந்த பேராசிரியர் ஒரு வர், அவர் இந்தப் பேருண்மையை நன்றாக விளக்கி எழுதி இருக்கின்றார். ஓய்வு கிடைத்தால் இங்கு வருவார். வரும்போதுஉனக்குச்சொல்கிறேன்" என்று மணிமேகலை கண்ணகியின் மகளே என்பதற்குப் பல காரணங்கள் —அவ்வளவும் அந்தப் பேராசிரியர் கூறியவையாம்-காட்டினார்கள். அந்த அறிவின் நுட்பத்தை எண்ணி வியந்து,

"பொருத்தம்தான்" என்றேன்.

"நான் இங்கே வந்தது வேறு ஒரு வேலையாக" என்றார் அவர்.

"என்னம்மா" என்றார் அப்பா.

"வேறு ஒன்றுமில்லை. இன்னும் ஊரிலிருந்து நெல் வந்து சேர வில்லை என்று நேற்றுப்பேசிக்கொண் டிருந்தோமல்லவா? ஊருக்கே போய் விசாரித்துவரலாம் என்று நினைத் தேன்" என்றார்.

"நானும் உடன் வருகிறேன் அம்மா" என்றார் அப்பா.

"உங்களுக்கு ஏன் தொந்தரவு. நானே போய் வருவேன்"

"இல்லை அம்மா நானும் வரு கிறேன், ஊரையும் பார்த்ததுபோல்

இருக்கும். நீங்கள் போனால் புதியவர் என்று ஏமாற்றுவார்கள் எனக்கு என்ன தொந்தரவு? காரில்போய் வருவதில்'' என்றார் அப்பா.

கருங்குழலி அம்மையார் போன சற்று நேரத்தில் அப்பாவும் அம்மாவும் எழுந்து சென்றனர்.

அமைதியாகக் கிடந்து உறங்கிய மணிமேகலையின் மாசற்ற முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த நானும் உறங்கிவிட்டேன்.

உறக்கம் கலைந்து எழுந்தபோது தாழ்வாரத்தில் நான்கைந்துபேர் மெல்லப் பேசும் ஒலி கேட்டது. கண் விழித்து உற்றுக் கேட்டேன். யாரோ புதியவர்கள் குரலும் இடையே கலந்து கேட்க, யார் என்று அறிய வெளியில் வந்து தலையை மட்டும் நீட்டிப் பார்த்தேன். அங்கே அம்மா, அப்பா, குழலியார், இவர்களுடன் வேறு இரண்டு ஆண்களும் இருந்தனர். அதில் ஒருவர் எனக்கு முன்னமே தெரிந்தவர்தான். கணவருடைய ஊர்ப் பள்ளிக்கூடத்து ஆசிரியர். அவர் எப்படி இங்கே வந்தார், என்று எண்ணியபடியேஅழைத்தால் போகலாம் என்று உள்ளே திரும்ப நினைத்தேன்.

''வாம்மா, வா. உறங்குகின்றாயே ஏன் எழுப்புவது என்றுதான் வெளியிலேயே இருந்தோம். வா'' என்று குழலியார் வரவேற்றார்கள்.

அங்கு போனதும் அந்தப் பள்ளிக்கூடத்து ஆசிரியர் ''என்னம்மா நலன்தானே? குழந்தை என்ன சொல்லுகின்றாள்?'' என்று கேட்டார்.

''நலன்தான்'' என்று சொல்லி அமைதியானேன்.

"வாருங்கள். உள்ளே போய் உட்காருவோம்; இங்கேயே ஏன் நிற்க வேண்டும்?'' என்று சொல்லிக் குழலியார் எல்லோரையும் உள்ளே அழைத்துப் போனார்கள்.

''இவர்தான் தங்கம், நான் சொன்னேனே அந்தப் பேராசிரியர்'' என்று மற்றொருவரை அறிமுகப்படுத்தினார்கள்.

''வணக்கம்'' என்று கைகூப்பினேன். பதிலுக்கு வணக்கம் சொன்னார் அவர்.

''அப்போது நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று அப்பா அவரைக் கேட்டார்.

எதைப்பற்றி என்ன சொல்லக் கேட்கின்றார் என்று ஏதும் விளங்காமல் விழித்தேன். என் நிலையைப் புரிந்துகொண்ட அந்தப் பேராசிரியர் ''எல்லாம் உன் வீட்டுச் செய்திதான் அம்மா'' என்று சொன்னார்.

'என்னங்க?' என்றேன்.

"இவர்தான் சொன்னார் உன் கணவர்க்கும் அவர் அண்ணனுக்கும் பகையாம்'' என்றார்.

"அப்படியா'' என்பதுபோல் நான் ஆசிரியரைப் பார்த்தேன்.

''ஆமாம் அம்மா, நான்கு நாட்களுக்கு முன் நடந்தது. இத்தனைக்கும் அந்தச் சண்டை பொன்னுச்சாமிக்கும் உன் கணவனுக்கும்தான் நடந்தது'' என்றார்.

''சொல்லுங்கள்'' என்று ஊக்கினேன்.

"என்னத்தைச் சொல்லுவது? சொல்லித் தீருகின்ற செய்தியா அது? சொன்ன பேச்சைக் கேட்கவில்லை. இப்போது துன்பப்பட்டு வருந்துகின்றார்கள்'' என்றார்.

''ஒன்றும் புரியவில்லையே'' என்றேன்.

''சொல்லுகிறேன் அம்மா. நான்கு நாட்களுக்கு முன் திடீரென உங்கள் வீட்டெதிரே ஆரவாரமாக இருந்தது. என்ன என்று அறிய வீட்டில் இருந்து வெளியில் வந்து எட்டிப் பார்த்தேன்''

என்று அவர் சொன்னவுடன் இவரைத்தான் வேற்றூருக்கு மாற்றியிருந்தார்களே வீட்டில் எப்படி இருந்தார் என்று புரியாமல் விழித்தேன். அதனால்,

''இப்போது நீங்கள் சொந்த ஊருக்கே வந்துவிட்டீர்களா? என்று கேட்டேன்.

''இல்லை அம்மா ஞாயிற்றுக்கிழமை அங்கு போய் இருந்தேன். வெளியில் எட்டிப் பார்த்தபோது உங்கள் வீட்டெதிரே ஒரேகூச்சலும் குழப்பமுமாக இருந்தது. பார்க்கலாம் என்று போனேன்; அங்கே அந்தப் பொன்னுச்சாமியும் உன் கணவனும் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டிருந்தனர். அம்பலவாணரும் உன் ஒரகத்தியும் யாரோ அயலவர்போல் ஒரு மூலையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். கூடி இருந்தவர்களும் 'நமக்கென்ன' என்று சும்மாகிடந்தனர். எனக்குப் பொறுக்கவில்லை. வருவது வரட்டும் என்று துணிந்து கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே சென்றேன். பொன்னுச்சாமியைப் பிடித்து இழுத்துத் தள்ளினேன். பிறகு இரண்டொருவர்வந்து அவனை அழைத்துப் போய் தொலைவில் விட்டுவந்தனர்.

''நான் சொக்கப்பனை எங்கள் வீட்டுக்கு அழைத்துப்போய் விசாரித்தேன்.

''அவன் பொன்னுச்சாமியின்மீது கொண்டிருந்த கோபத்தைவிட அம்பலவாணர்மீதும் உன் ஒரகத்தியின் மீதும்தான் அதிகக் கோபம் கொண்டிருந்தான். மெல்ல மெல்ல என்ன காரணம் என்று அவனையே கேட்டேன்.

'உங்களுக்கு என்ன ஐயா தெரியும்? இந்தக் கள்ளியும் அவள் கணவனும் தூண்டிவிட்டுத்தான் அவனுக்கு என்னை அடிக்கத் துணிவு பிறந்தது. அண்ணனும் அண்ணன். அவன் சாது சாது என்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். எனக்கென்னமோ நம்பிக்கை இல்லை. இனி அவர்கள் உறவே கூடாது'' என்று கோபமாகக் கூறினான்.

''எவ்வளவோ சொன்னேன். அம்பலவாணன் அப்படி எல்லாம் செய்யமாட்டான் என்று. ஆனால் சொக்கன் எதையும் நம்பவில்லை. அதுவும் நல்லதற்குத்தான் என்று பிறகு எண்ணினேன்'' என்றார்.

''ஏன் நல்லது என்கிறீர்கள்?''

''இதனாலாவது அவன் அவர்களை விட்டுப் பிரிந்து சில நாட்கள் இருந்தால் பிறகு தன் மனைவி தன் மக்கள் என்ற எண்ணம் பிறக்காதா என்று நினைந்தேன்''

''இப்போது எப்படி இருக்கிறார்?''

''நிலைமை வளர்ந்திருக்கின்றது. எதிர் வீட்டுக்காரரையும் மணியக்காரரையும் வைத்துக்கொண்டு பங்கு பிரித்துவிட்டார்கள். தனித்தனிக் குடித்தனம்தான்'' என்றார்.

''இவர் சாப்பிட என்ன செய்கின்றார்?''

இரண்டொரு வேளை அந்தச் செங்கமலக் கிழவியின் வீட்டிலிருந்து வந்தது. பிறகு அவனே சமைத்துக் கொள்கின்றான்'' என்றார்.

சிறுமி ஒருத்தி தட்டு நிறைய பழங்களும் சிற்றுண்டியும் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போனாள். "வேண்டாம் அம்மா. ஏன் இதெல்லாம்?'' என்று பேராசிரியரும் ஆசிரியரும் மறுத்து மறுத்துச் சொல்லச் சொல்லக் குழலியார் அவர்களை அன்புடன் ''உண்ணுங்கள்; கொஞ்சமாவது எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று உபசரித்தார்கள்.''

இடையில் சில நாட்கள் அந்தப் பழங்கதையை அறவே மறந்துவிட்டிருந்தாலும் என் மனம் இந்தப் புது

நிகழ்ச்சிகளைக் கேட்டதும் கசிந்தது. கலங்கினேன். கண்கள் மனதின் நெகிழ்ச்சியைப் புலப்படுத்திவிடுவன போல் நீர் நிறைந்து அச்சுறுத்தின. மெல்லக் கண்களைத் துடைத்துக் கொண்டேன். அம்மா எப்படியோ இதைப் பார்த்துவிட்டார்கள்.

"அழாதே கண்ணே, என்ன செய்வது அழாதே" என்று சொல்லித் தானும் கண்களைக் கசக்கிக்கொண்டாள். அப்பா வேறு பக்கமாகத் திரும்பி எதையோ பார்ப்பதுபோல் இருந்தார். அங்கே அமைதி நிலவியது.

அண்ணனைப்பற்றியோ அண்ணியைக் குறித்தோ இதுவரை பகையாக எண்ணாமல் இருந்த கணவர் திடீரென ஏன் அப்படி அவர்கள் மீது வெறுப்புக்கொண்டார் என்பது எனக்கு விளங்கவே இல்லை. இத்தனைக்கும் பொன்னுச்சாமியுடன் தான் இவர் சண்டை போட்டிருக்கின்றார். அதனால் அண்ணன் மீது அவர் கோபம் கொள்வானேன் என்பது எனக்குப் புரியவில்லை. ஆசிரியர் எப்போதோ ஒருமுறை போனவர். அவர்க்கு என்ன தெரிந்திருக்கப் போகின்றது? ஒருவேளை கணவரே அவரிடம் ஏதேனும் மறைத்துச் சொல்லி இருக்கலாம். நாளெல்லாம் அந்த வீட்டிலேயே கிடந்து அல்லற்பட்டபோதும் எனக்கு அங்கு நடந்த நாடகம் தெரியாமல், செங்கமலக் கிழவியால் செய்திகளை அறிந்தேனே, எங்கோ நெடுந்தொலைவில் இருந்து கண்ணால் காணாமல் காதால் கேட்பவை மட்டும்கொண்டு என்ன அறிய முடியும் என்று ஆறினேன்.

உயிர்ப்பு அற்ற அமைதியைக் கலைத்துப் பேராசிரியரின் குரல் அங்கே வெளிவந்தது.

"கலங்காதே அம்மா. மனதை உறுதிப்படுத்திக்கொள். என்ன செய்வது? துன்பத்தில் கலங்காத உறுதியான மனம்தான் வாழ்க்கைக்கு நல்ல வழி காட்டியாகும்" என்றார்.

ஏதும் மறுமொழி பேசாது அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். இன்னும் ஏதாவது சொல்லுங்கள் என்று என் முகம் குறிப்புக் காட்டி இருக்கும் என்று நினைக்கின்றேன்.

"துன்பம் சலக்காமல் இன்பம் மட்டுமே அடைந்தவர்கள் எனக்குத் தெரிந்தவரை யாருமே இல்லை அம்மா. எனக்குத் தெரிந்தவள் ஒருத்தி நன்றாகப் படித்தவள், உடல் நோய் தீர்க்கும் மருத்துவராக இருந்தவள்தான்; ஆனால் அவள் உள்ள நோயைத் தீர்க்க முடியாமல் பட்ட இன்னலும் தொல்லையும் என்னவென்று அம்மா சொல்வேன்" என்றார்.

"யார் அது, அமைந்தகரையில் இருந்து பிறகு பெங்களூர்க்குப்போய் அங்கே வசித்துவந்தாளே, அவளைத் தானே சொல்லுகின்றீர்கள்?" என்று குழலியார் இடையே கேட்டார்.

"ஆமாம், அம்மா. அவளேதான், அவள் மிகவும் நல்லவள். ஆனால் அவள் கணவன் அவளைப்படுத்திய பாட்டால் அவள் வாழ்வே இருள் சூழ்ந்துபோயிற்றே" என்றார்.

எனக்கு என்ன சொல்வது என்றே தோன்றாமல் அமைதியாகவே இருந்தேன்.

"கலங்காதே அம்மா. உறுதியான மனத்தோடு இரு." என்று கூறினர்.

பிறகு சற்று நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தோம் "மாலையில் வேலை இருக்கிறது போய்வருகின்றேன்" என்று பேராசிரியர் எழுந்தார். "நானும் போய் வருகின்றேன்" என்று ஆசிரியரும் உடன் எழுந்தார்.

ஆசிரியரைப்பார்த்துக் குழலியார், "ஆமாம் உங்களுக்கு இவரை எப்படித் தெரியும்? என்று பேராசிரியரைக் காட்டிக் கேட்டார்.

"என் மாணக்கன் ஒருவன் சின்ன வயதில் இவரிடம் படித்தவன். நான் ஒருமுறை அவன் ஊருக்குப் போன போது அங்கே பழக்கம். அதன் பிறகு அடிக்கடி என்னைக் காண வருவார். காலையில் அதுபோல் வந்தார். 'கண்ணகி இல்லம்' போகலாம் வாருங்கள் என்று அழைத்து வந்தேன்." என்றார், பேராசிரியர்.

அவர்கள் போனபின்னரும் அப்பாவும் அம்மாவும் நெடுநேரம் ஊர்ச் செய்திகளைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். அன்று இரவெல்லாம் உறக்கம் கொள்ளாமல் ஏதேதோ எண்ணியபடி குழம்பிக் கிடந்தேன் நான்.

(தொடரும்)

# பெருமூச்சு பேசுகிறது!

"அம்மா! எகிப்திய மொழியில் இரண்டொரு வார்த்தை சொல்லுங்களேன்"

என்று கேட்டேன், நான் பயணம் செய்த கப்பலில் வந்த பெண்மணியை. முகமெல்லாம் கருங்கிற்று, அவளுக்கு. "எனக்கு எகிப்தியமொழி தெரியாது. நான் கிரேக்கம்", என்று அவசரத்தோடு பதிலளித்தாள். கிரேக்க மொழியில் கையெழுத்துப்போட்டுக் கொடுங்கள், என்று நான் ஆவலோடு கேட்டேன். "கையெழுத்து வேண்டுமானால், சரி. நான் படிக்கவில்லை," என்றாள்!! அந்த அம்மணியிடம் கிரேக்க இலக்கியம் எப்படி, இந்திய இலக்கியம் எப்படி என்று ரசமாக அலச ஆரம்பித்தேன்-அவளோ, எகிப்தில் முட்டை விலை எப்படி, வெண்ணெய் என்ன விலைக்குக் கிடைக்கும் என்கிற விபரங்களைக் கொட்டலானாள். எவ்வளவு பெரிய நாட்டினர், எவ்வளவு வீழ்ச்சியுற்று விட்டனர்!"

*

எவ்வளவு பெரிய நாட்டினர்! எவ்வளவு பெரிய வீழ்ச்சி!—என்கிறார் பத்மினி சென்குப்தா.

கிரேக்கம், மாவீரன் அலெக்சாண்டர் போன்ற வீரர்களை மட்டுமல்ல, மனித உலகுக்கே அரிய கருத்துரைகளை வழங்கிய சிந்தனைச் சிற்பிகளைப் பெற்றிருந்த தேசம். சாக்ரடீசும், பிளேட்டோவும், அரிஸ்டாடிலும் வளர்ந்த பூமி அது! வான ஆராய்ச்சிகளையும், கணித சித்தாந்தங்களையும், கிருஸ்துக்கு முன்பே விவாதித்துக்கிடந்த கவின் கலைக்கூடம், அது. மாடமாளிகைகள்! கூடகோபுரங்கள்! கலை! காவியம்!—இதுபோல வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சிறப்புற்றோங்கிய நாடு.

சரிதத்தில் தனிப்பெரும் புகழ் பெற்றிருப்பது! சரித ஆசிரியர்களால் தமிழகத்தின் புகழைப் பற்றிப் பேசும்போது, எடுத்தோதப் படுவது!! உலகிலேயே சரிந்த சாம்ராஜ்யங்கள் என்று கூறப்படும்

ரோமாபுரிக்கும் முதலாக இருப்பது. வீரர்தம் கோட்டம்! வெற்றிச் செல்வியின் கூடம்! கல்வி மாளிகை! காவிய அரங்கு! கவின் மலர்ப் பூங்கா!—இதுபோல், எதுவேண்டுமாயினும், எழுதலாம். கிரேக்கத்தின் மாட்சிக்கு அங்கே இன்று இடிந்துபோய்க் கிடக்கும் மாட மாளிகைகளே போதும்.

அந்தக் கிரேக்க நாட்டுப் பெண் மணிதான், கைநாட்டுப் பேர்வழியாகக் காட்சி அளிக்கிறாள்! கண்ட தோழியர் பத்மினி சென்குப்தா, கிரேக்கத்தின் மாட்சியைக் கற்று உணர்ந்தவர் என்பதால், பெருமூச்சுடன் தீட்டுகிறார் 'இந்து' ஏட்டில் —எவ்வளவு பெரிய நாட்டினர், எவ்வளவு பெரிய வீழ்ச்சியுற்றனர், என்று!!

கிரேக்கத்தை ஒருமுறை நினைத்துக்கொண்டு இந்தக் காட்சியையும் எண்ணிடின்-பெருமூச்சு அல்ல, இதயமே வேகும்! மாளிகை இருந்த இடத்தில் காளான் இருப்பது போல, கற்றறிந்தோர் உலவிய மண் இன்று கல்லாதவர்களின் கூடமாக இருக்கிறது. ஹோமர் எனும் கவி எழுதிய 'இலியட்' எனும் இலக்கியத்தை உலகு புகழ்கிறது! ஆனால் அம்மையாருக்கோ அதுபற்றித் தெரியாது, வெண்ணெய் விலையைப்பற்றி விபரம் கூறுகிறார்!!

கிரேக்க மாது மட்டுமா? அதோ கத்தரிக்காய் விற்றுக்கொண்டு வரும் காவேரியைப் பார்த்து, வள்ளுவரை அறிவாயா, சேரன் செங்குட்டுவன் தெரியுமா, சிந்தாமணியும் சிலம்புச் செல்வமும் உணருவாயா என்று கேளுங்கள், 'போ, சாமி!' என்பாள். கொஞ்சம் விபரம் தெரிந்தவள், 'சிந்தாமணின்னு எதுங்க? பாகவதரும்அசுவத்தாமாவும் நடிச்சாங்களே, அந்தப்படம் தானே!' என்பாள்.

கிரேக்கம் வான்புகழ்கொண்டு வாழ்ந்த நாட்களில் அதோடு வாணிகத் தொடர்புகொண்டு வாழ்ந்ததாம், தமிழ்நாடு. கிரேக்க மாது வெண்ணெய் விலை பேசுகிறாள்! தமிழணங்கு கத்தரிக்காய் விபரம் தருகிறாள்!!

எவ்வளவு பெரிய நாட்டினர்! எவ்வளவு பெரிய வீழ்ச்சி!! — என்று பழைய வாழ்வினையும் இப்போதுள்ள நிலையினையும், எண்ணிப்பார்த்த காரணத்தினாலேதான் நாம் 'அந்த வாழ்வுதான் எந்நாள் வரும்?' என்று ஏக்கத்துடன் கேட்கிறோம். காக்கைப் பாடினியும் நச்செள்ளையும் வாழ்ந்த நாடய்யா இது! ஏடெடுத்தால் கவிதையும், 'இம்' என்றால் எத்தனையோ பாடல்களும் இயற்றத் தெரிந்த 'ஔவை' கள் உலவிய அருந்தமிழகம் இது! இன்றோ, தாலாட்டும் ஒப்பாரியும் கூட சரிவரத் தெரிந்தவர்களாக இல்லை, தமிழக்குடி மங்கைகள். ஒரு கைச் சோற்றுக்கும் உடம்பை மூடுகிற துணிக்கும் ஆலாய்ப் பறக்கிறார்கள்! வாழ்ந்த வாழ்வு மீண்டும் வருமா? வளமார் திருஇடம் எழிலகம் ஆகுமா?—என்று முரசு எழுப்புகிறோம், நாம். "தமிழ் நாடா? எது?" என்று கேட்கும் முத்தண்ணாக்களாகத் தமிழ்க்குடி பிறந்தோர், தட்டுத்தடுமாறி கிடக்கும், நெஞ்சு கொதிக்கும் நிலை கண்டு, மனம் புண்ணடைந்து புலம்புகிறோம், நமது நாட்டின் பழந்தமிழ்ப் பெருமை குறித்து.

எழுத்தறிவிலாத கிரேக்கமாது! கத்தரிக்காய் சுமந்து விற்கும் காவேரி! — இருவரும், தங்கள் நாடு, மூதாதையர் பெருமை, இவைகளைப்பற்றி அறியாமலிருப்பது கேலிக்குரிய விஷயமல்ல. அவர்களுக்கெல்லாம் வாழ்க்கையே ஒரு பிரச்னையாக இருக்கும்போது, சிந்திக்கவோ அல்லது தெரிந்து கொள்ளவோ, நேரம் ஏது. ஒரு காலத்தில் வானம் பெய்தது, ஏரி நிரம்பிற்று, கழனிகள் கதிர்மணிகளைக் குவித்தன, கலங்கள் கடற்கரையில் குவிந்தன, வளம் கொழித்தது, வறுமையில்லை, வாழ்வு துலங்கிற்று! வாழ்க்கை எனபது இயலும் இசையும் கூத்தும் போட்டியிடும் இன்ப காவியமாக அமைந்தது!

இப்போது, வாழ்வு காவியமாகவா உளது? பெரியதோர் பிரச்னையாகவன்றோ பயமுறுத்துகிறது!

ஏன் இந்தநிலை, இதுமாறவே முடியாதா, என்று எண்ணிப் பார்த்ததால்தான் இன்று எண்ணற்ற தாயகத் தொண்டர்கள், தனிநாடு வேண்டும், தாயகம் வாழவேண்டும், என்று முரசறைந்து வலம் வருகின்றனர், நாட்டில்.

வாழ்ந்தோர் வீழ்ந்த விதம்பற்றி அறிந்தார்கள் அவர்கள்—வீழ்ந்த குழியிலிருந்து எப்படி மீட்பது என்பதனையும் உணருகிறார்கள்— அதனால் நாடெங்கும் கருத்துரைகளைப் பரப்பி திருஇடம் பழம் புகழ் பெற, பாடுபடுகிறார்கள்.

பத்மினி சென்குப்தா அம்மையாருக்கு கிரேக்கமாது, பெருமூச்சை உண்டாக்கிவிட்டாள்! காவேரியும் கந்தப்பனும் நமது உள்ளங்களிலே எரிமலையை அன்றோ எழுப்பிக்கொண்டுள்ளனர் ஒவ்வொரு நிமிடமும்!

வீழ்ந்த நாட்டை மீட்க எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு, இதய முள்ளோர் அனைவரும், பாராட்டுரையும், வீழ்ந்த இனம் வீறு கொண்டெழுகிறது எனும் முன்னுரையுமே வழங்க முற்படுவர். சுயநலமும் சூதும் பதவிமோகமும் பீடிக்கப்பட்டிருப்பதால் அந்த நல்லெண்ணம் எழவில்லை. நாக்கை விற்று நடமாடுகிறார்கள் நாட்டில். அவர்களுக்காகப் பரிதாபப்பட்ட வண்ணம, நமது பணியை தொடர்ந்து செய்யவேண்டும் நாம். அப்போதுதான் புதிய தாரகம் பூக்கும், வீழ்ந்த இனம் எழுச்சியுறும்.

✶

**இன்னொருவர்.....**

**சென்னைக்குத் தமிழ்நாடு என்று பெயரிடவேண்டும் என்கோரி இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூரில் ராபர்ட் எனும் 25 வயதுள்ள வாலிபத் தோழர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பதாக மதுரை 'தமிழ்நாடு' இதழ் தெரிவிக்கிறது.**

## முகப்பில்.....

தொல்லை வருகின்றது என்ருல் தான் தூர விலகிநிற்போருங்கூட நெருங்கிவந்து உறவு கொண்டாடுகின்றனர். கிராமங்களில் வேறு எப்போதும் இல்லாத ஒற்றுமை நெருக்கடியான நேரங்களில் ஏற்படுவது உண்டு. அதைப்போல் உலக நாடுகள், இரண்டாம் உலகப் பெரும் போர்க்காலத்தில் பட்ட இன்னல் தாங்காமல் கலங்கிப் போயின. மாநிலம் முற்றும் எங்கள் மன்னர்பிரானுடையதே என்று மமதை பேசிய நாடுகளும் மனங் கலங்கிக்கிடந்தன, மாற்ருர் காலடியில் மண்டியிட நேருமோ என அஞ்சிக்கிடந்தன.

ஏகாதிபத்திய வெறிகொண்டு எங்கும் எங்கள் கோல் நிழல் உலவ வேண்டும் என்று எண்ணிக் கிடந்த நாடுகள் எல்லாம் 'சேர வாரும் செகத்தீரே' என்று அழைத்து ஒற்றுமைக் கீதம் இசைத்தன.

ஊருக்கு ஒரு பொதுக்குழு ஏற்படுத்திக்கொண்டு அங்கு நீதி கேட்டு நியாயம் பெறுவதைப் போல் உலகத்திற்குப் பொதுவானதொரு மன்றம் காணவேண்டும், மனமாச்சரியங்களை அங்கே போக்கிக்கொள்ளவேண்டும்; அடிபிடி கூடாது, அன்பு நெறி வேண்டும் என்று சொல்லி உலக நாடுகள் எல்லாம் ஒன்றுதிரண்டன. அப்போது,தான் நடந்து முடிந்த போரின் கொடூரமான விளைவுகளின் நினைவுகள் அந்தந்த நாட்டு மக்களின் மனதில் மறையாது இருந்த நேரம். போரினுல் வரும் கேடுகளையும், அழிவுகளையும் நன்கு தெரிந்திருந்த சமயம்; அந்த நேரத்தில் 'ஒன்றுபடுவோம் வாழ்வு பெறுவோம்' என்று எல்லோரும் கூடி உலக மன்றம் ஒன்று கண்டனர்.

“ஐக்கிய நாடுகள் சபை”தான் அந்தப் பெருமன்றம்.

ஐ. நா. சபை தோன்றிய நாளில் இருந்து, இன்று வரை நன்முறையில் தனது பணியைத் திறம்பட ஆற்றிவருகின்றது. எங்கே அமைதி கெடும் என்று அறிகுறி தோன்றுகின்றதோ அங்கே தன் பணியைத் தொடங்கி சமாதானத்தை நிலைநாட்ட முயன்று வருகின்றது.

நினைப்பைச் செயலாக்கி நொடிக்குள் நூறு அற்புதங்களை விளைக்கும் வகையில் அறிவியல் வளர்ந்திருக்கும் இன்று ஐ. நா. போன்றதொரு அமைப்பு இன்றேல் உலகம் அழிவுப்பாதையில் போவதை எப்படித் தடுக்க இயலும்.

வலியோர் எளியோரை வாட்டும் நிலை வாய்த்துவிடும் இரங்கத்தக்க அந்த நிலைக்கு இன்று உலகம் செல்லாமல் காத்து நிற்கும் நற்றொண்டினை ஓரளவு ஐ. நா. செய்து வருகின்றது.

கொரியா, சூயஸ், ஹங்கேரி இங்கெல்லாம் அணுகுண்டுகள் அள்ளித் தெளிக்கப்பட்டு மக்கள் அழுகுரலாகி அல்லற்பட்டிருப்பர். ஆனுல் அங்கெல்லாம் அமைதி நிலவுவதற்கு ஐ. நா.வின் தொண்டு முக்கிய காரணம் என்பதை உணரும் போதுதான், அதன் தலைமை நிலையத்தின் பணியாளர்களின் பொறுப்பையும் நன்கு உணருகின்றேம்.

இத்தனை பெரிய சேவையைச் செய்து வரும் ஐ நா. வின் தலைமை நிலையம் நியூயார்க் நகரில் விண்முட்ட வளர்ந்தோங்கி நிற்கின்றது. கோடானுகோடி மக்களின் மனதில் நல்லெண்ணத்தைப் பெற்றுத் துலங்கிடும் அப்பெரு நிலையத்தின் பொதுச்செயலாளர் டேக் ஜல்மர்ஆக்னே கார்ல் ஹமர்ஸ் ஜீல்ட் தான் இவ்விதழ் முகப்பில் காட்சியளிப்பவர்.

சலியாத உழைப்பும் குன்ருத ஊக்கமும்உடையவர் இவர்; சூயசில் சலசலப்பு ஏற்பட்ட பிறகு நாள் ஒன்றில் நான்கு மணி நேரம்கூட உறங்க இயலாமல் தொண்டு செய்திடுகின்ருர் என்றும், உலக அமைதியை நிலைநிறுத்துவதில் மிக்க ஆர்வங்கொண்டு உழைக்கின்ருர் என்றும் கூறப்படுகின்றது.

உலகத்துக் குடும்பங்கள் அமைதியான சூழ்நிலையில் வாழ நினைக்கும் சுவீஷன் நகரத்தில் பிறந்த இவர் திருமணம் செய்துகொண்டு தனக்கென ஓர் குடும்பம் ஏற்படுத்திக் கொள்ளாமல்தான் ஐம்பது ஆண்டுகளைக் கழித்திருக்கின்ருர்.

கேளிக்கைகளில், விருந்து விளையாட்டில் தீராத விருப்பமுடையவர் என்றும், அவருக்குப்பொழுதுபோக்கே அவைதான் என்றும் கூறப்படுகின்றது.

ஐ. நா.வுக்கே நான்தான் உயிர்நாடி, ஆகவே எனக்குத்தனியாகத் தான்எதுவும்தேவை என்று வீண் ஆடம்பரம் தேடிடும் வெற்றுவேலைகளில் இவர் ஈடுபடுவதில்லையாம்.

அலுவலகம் செல்வதற்குஎன்று இவருக்குத் தனிவிமானம் ஏற்பாடு செய்தார்களாம். ஆனுல் அவர் “எனக்கு ஏன் தனி விமானம், எல்லோரையும்போல் நானும் பொது விமானத்திலேயே போவேன், வருவேன்” என்று கூறிவிட்டாராம். வேலைப்பளு நீங்கி இருக்கும் சிற்சில நேரங்களில் பொது இடங்களில் இருக்கும் சிற்றுண்டி நிலையங்களுக்குச் சென்று அங்கு மக்களுடன் வேற்றுமையின்றிக் கலந்து மகிழும் இயல்புடையவர் என்றும் சொல்லப்படுகின்றது.

ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் சம்பளமாகவும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவுத்தொகை மானியமாகவும் பெறுகின்ருர் என்பதை அறிகின்றபோது, அடேயப்பா 'இவ்வளவு பெருந்தொகையா' என்று சிலர் மலைக்கக்கூடும். ஆனுல் அவர் ஈடுபட்டிருக்கும் அரும்பணிக்கு அந்தத் தொகை ஈடாகாது என்றே எவரும் கருதுகின்றனர்.

சிறப்பான உணவு, சீரான ஆடை, செல்வமான சூழ்நிலை இவற்றையே இவர் பெரிதும் விரும்புகின்ருர் என்ருலும், நெருக்கடிகளில் இவற்றைத் துறந்து, மறந்து தன் பணிகளில் மூழ்கிவிடக் கூடியவர் என்பதும் “ஐ. நா. சபையின்றி உலகம் அமைதியாக வாழ இயலாது. மக்கள் இன்று இதனை உணரவில்லையேனும், நாளடைவில் இது தெளிவாக விளங்கும்” என்று கூறும் இவர் ஐ. நா.வினிடத்தில் நீங்காத பற்றுகொண்டிருப்பதும், ஐ. நா. வுக்கு ஒரு நல்ல தொண்டர் வாய்த்தார் என்பதைக் காட்டுகின்றன.

★

# ★ முன்னேறவா முடியும்! ★

சென்ற செப்டம்பர் மாதம் 1-ந் தேதி நள்ளிரவில் ஹைதராபாத் ராஜ்யத்தில், மகபூப் நகர் அருகே பிரயாணிகள் இரயில் வண்டிக்கு நேர்ந்த கோர விபத்து பற்றியும், அதில் சிக்கி உயிரிழந்த சுமார் நூற்று முப்பது பிரயாணிகளைப் பற்றியும் நினைவிருக்கலாம். செக்கந்தராபாத்–துரோணாசலம் பகுதியில் ஜாட்சேரலாவை விட்டுப் புறப்பட்ட வண்டி மகபூப் நகர் நிலையத்தை அடையுமுன் ஒரு பழைய இரயில் பாலத்தின் வழியாகச் செல்ல வேண்டி இருந்தது. அந்தக்காட்டாற்றில் சில தினங்களாகவே வெள்ளப் பெருக்கெடுத்து, பாலத்துக்கே சேதம் விளைவித்திருப்பதை அதிகாரிகள் யாரும் முன்னதாகக் கவனிக்கவில்லை.

ஆனால், விபத்து நடப்பதற்குச் சரியாக 21-மணி நேரத்திற்கு முன் எதிர்புறத்திலிருந்து வந்த மற்றொரு இரயில் வண்டியில மகபூப் நகர் இரயில்வே தொழிலாளர் சங்கத் தலைவர் பிரயாணம்செய்தார். பாலத்தின் அபாயமான நிலைமையில், அதன்மீது இரயில் வண்டி செல்வதை எப்படியாவது தடுக்க வேண்டுமென்று அவர் கருதினார். மகபூப் நகர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று, வண்டியைப் பாலத்தின்மேல் ஓட்டாமல் தடுக்கும்படி அவர் கேட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால், அவருடைய எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் வண்டி புறப்பட்டது. எனினும், அந்தத் தொழிலாளர் தலைவர், கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு, பாலத்தை நெருங்குமுன் இரயில் வண்டியை நிறுத்த, அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். வண்டி நிறுத்தப்பட்டாலும், அவருடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், பாலத்தின் மீது வண்டி மெதுவாக விடப்பட்டதாம். அதே பாதையில், இருபதுமணி நேரத்திற்குப் பின், நள்ளிரவில் மகபூப் நகரை நோக்கி வந்த பிரயாணிகள் வண்டிக்குத்தான் மேற்கண்ட கோர விபத்து நேரிட்டது. அந்த விபத்தில் 130-பேர்வரை உயிர் துறக்க நேரிட்டது. நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தார்கள். அதன் பரிதாபகரமான விவரங்கள் நாடெங்குமே அதிர்ச்சியை அளித்தன.

அந்தத் தொழிலாளர் தலைவரின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தியிருந்தால், அடுத்த வண்டியை விடாமல், ஒருவேளை இந்தக் கோரமான விபத்தைத் தவிர்த்திருக்கலாமல்லவா? ஆனால், நடந்தது என்ன? ஆபத்தை முன்னதாக அறிவிக்க நினைத்த மேற்படி தொழிலாளர் சங்கத் தலைவர்மீது அன்பு காட்ட வேண்டியதுபோக, சங்கிலியை இழுத்து இரயில் வண்டியை நிறுத்தியதற்காக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்களாம். இதைவிட ஆச்சரியமான செய்தி இருக்க முடியுமா? அதுவும் இருக்கிறது. சென்ற வாரம் இதைப் பற்றி பார்லிமெண்டில் மந்திரி அளித்துள்ள பதில் இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது!

"பிரயாணிகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமென்ற பொறுப்பு உணர்ச்சியுடன் இரயில் வண்டியை நிறுத்திய மேற்படி தொழிலாளர் தலைவர்மீது ஹைதராபாத் நிர்வாகம் வழக்குத் தொடர்ந்திருப்பது உண்மையா? அது உண்மையானால் ரயில்வே மந்திரி தலையிட்டு, வழக்கை வாபஸ் பெறும்படி செய்யக் கூடாதா?" என்று பார்லிமெண்டில் அங்கத்தினர்கள் சிலர் சரமாரியாகக் கேள்விகள் கேட்டனர்.

இதற்கு கனம் லால்பகதூர் சாஸ்திரி பதில் கூறியிருப்பது வியப்பிலும் வியப்பளிக்கக் கூடியது. தொழிலாளர் தலைவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருப்பது உண்மைதானென்றும், ஆனால் குற்றச்சாட்டை வாபஸ் வாங்கச்சொல்லித் தாம் எவ்வளவோ அறிவித்தும், பயன்படவில்லை என்றும் வருத்தப்பட்டார் இரயில்வே மந்திரி.

உலகத்தில் எந்தப் பகுதியில் அக்கிரமம் அநியாயம் நடந்தாலும் அதைத் தடுக்கவும் சீர்திருத்தவும் வலுவில் சென்றுகொண்டிருக்கிறது நமது சர்க்கார். எகிப்தை சர்வ பலம் பொருந்திய பிரிட்டன் ஆக்கிரமித்தபோது அதைக் கண்டித்துத் தடுத்து நிறுத்தப் பாடுபடுகிறார் நமது நேருஜி.

அப்படிப்பட்ட நாட்டில், அந்த சர்க்காரின் கண்முன்னேயே இலாகாவினர் கவனக் குறைவால் நடந்துவரும ஒரு நியாயமற்ற செய்கையைத் தடுக்க முடியவில்லை என்று ஒரு மந்திரி சொல்லுவதை விட மதிப்புக் குறைவான கூற்று வேறு இருக்கமுடியாது? இந்தத்தேசத்தின் கௌரவம் தான் என்ன ஆவது?

அதுமட்டுமல்ல, பொது நலக் கருத்துடன் சேவை செய்யப்போனால், அதற்குப் பாராட்டுதல் இடைப்பதற்குப் பதிலாக அவதிகளுக்கு ஆளாக நேரும் என்று மக்கள் நினைக்க இடமளித்தால், பொது மக்கள் ஒத்துழைப்பைப் பெற்று அந்த நாடு எப்படி முன்னேற முடியும்!

[அரியலூர் கோரம் நடப்பதற்கு முன்பு, கடந்த கிழமை எழுதப்பட்ட தலையங்கம் இது. தீட்டியது நாமல்ல; "ஆனந்தவிகடன்"]

★

REGD. NO. M. 4642 போன் நெ. 1

வாழ்க பெண்குலம்!

**கல்பனா கலாமந்திர்**

பெருமையுடன் அளிக்கும்



அறிஞர் அண்ணா எழுதிய

# தாய் மகளுக்குக் கட்டிய தாலி

நடிகர்கள்:

**M.G.ராமச்சந்திரன் · பானுமதி**

P.கண்ணாம்பா · K.A.தங்கவேலு · M.G.சக்ரபாணி

D.பாலசுப்ரமணியம் · R.பாலசுப்ரமணியம் · E.V.சரோஜா

E.R.சகாதேவன் · காகா ராதாகிருஷ்ணன் மற்றும் பலர்..

வசனம்: RM. அரங்கண்ணல்

சங்கீதம்: T.R.பாப்பா · ஆர்ட்: C.ராகவன் · ஸ்டுடியோ: வாஹினி

டைரக்ஷன்:

**R.R.சந்திரன்**

கல்பனா கலா மந்திர்...39, உஸ்மான் ரோடு...சென்னை-17

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்

Best copy avail